பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

துரித தபால் பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 03 | ஞாயிற்றுக்கிழமை | (15-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 58

# தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியவர்களுக்கே சிங்கள மக்கள் வாக்களிப்பர்

## சந்தேசியவுக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி

(லண்டன்)

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிங்கள மக்கள், தமிழ் மக்களின் அபிலாசைகளை, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய அரசியல் தலைமைத்துவ சக்திகளையே தெரிவு செய்வார்கள். இவ்வாறு விடுதலைப் புலிகளின அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

ஐரோப்பாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அவர், சுவிஸ்லாந்தில் இருந்து லண்டன் பி.பி.சியின் சந்தேசிய சிங்கள சேவைக்கு நேற்று அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழ் மக்களை மீண்டும் ஆயுத போராட்டத்திற்கு தள்ளாமல் இருக்கும் பொறுப்பு சிங்கள மக்களையே சாரும்.

சிங்கள மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் சமாதானத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் அச் சந்தர்ப்பத்தை சிங்கள அரசியல் தலைமைகள் பயன்படுத்தத் தவறிவிட்டன.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள கடந்த காலங்களில் மேற்கொண்ட அஹிம்சை வழிப் போராட்டங்களை சிங்கள அரசாங்கங்கள் ஆயுதமுனையில் அடக்கி ஒடுக்கியதானாலேயே தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

அதனால்தான் இன்று ஆயுதசம பலத்துடன் பல அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு முயற்சிக்கின்றனர்.

சிங்கள மக்கள் இதனை உணர்ந்து அர்ப்பணிப்புடன் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய தலைவர்களையே சிங்கள மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

இதன் மூலம் தமிழ் மக்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தாத நிலை உருவாவதை, சிங்கள மக்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் அப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## காதலர் தினமான நேற்று இளைஞர்கள் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

காதலர் தினக் களியாட்டங்களில் ஈடுபட்ட இளைஞர் குழுக்கள் நேற்று யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் அடாவடி நடவடிக்கைகளிலும் சேஷ்டைகளிலும் ஈடுபட்டனர்.

வீதிகள், ஒழுங்கைகளில் உரத்த சத்தமாகக் கூக்குரலிட்டு ஓலமிட்டதுடன் போக்குவரத்திற்கு இடையூறாக வீதிகள், ஒழுங்கைகளில் கூடி நின்று அட்டகாசம் புரிந்தனர்.

சில முக்கிய வீதிகளில் மது போதையில் அலைந்த இளைஞர்கள், வீதியால் சென்றோரை வலிய வம்புக்கு இழுத்து ரகளை புரிந்தனர்.

இதேவேளை யாழ்.நகரின் குளிர்பான நிலையங்களில் சோடி சோடியாக. இளைஞர் யுவதிகள் நிரம்பி வழிந்ததையும், ஒழுங்கைகள், மறைவிடங்களில் கூடி நின்றதையும் அவதானிக்க முடிந்தது.

அத்துடன் அன்பளிப்புப் பொருட்கள் விற்பனையும் நகரில் சூடு

(12ம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறை மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை 3-ம் குறுக்கு வீதியை மக்கள் பாவனைக்கு திறந்து விடுமாறு கோரி, அவ் வீதிக்குக் குறுக்காக உள்ள படையினரின் காவலரண் முன்பாக அப் பகுதி மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று இடம்பெற்ற இப் போராட்டத்தில் கொழும்புத்துறை மாதர் சங்கத்தினர் மற்றும் தும்புத் தொழிலாளர்கள் எனப் பெருந்திரளானோர் ஈடுபட்டனர்.

தும்புத் தொழிலில் ஈடுபடுவோர் கடலில் நனைந்த தேங்காய் மட்டைகளை மேற்படி வீதிவழியாக இலகுவாக எடுத்துச் செல்வதற்கு உதவும் வகையில், 3-ம் குறுக்கு வீதியை திறந்து விடுமாறு கோரியே

(12ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் குழு இன்று நாடு திரும்பும்

(கொழும்பு)

ஐரோப்பாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் இன்று நாடு திரும்புகின்றனர்.

முற்பகல் 11மணிக்கு கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும் இக் குழுவினர் அங்கிருந்து அரசின் வான் படைக்குச் சொந்தமான விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சியை பிற்பகல் 2.30 மணிக்கு சென்றடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அடுத்தவாரம் முற்பகுதியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் மற்றும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் ஆகியோரை, அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் சந்தித்து கலந்துரையாடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்க புலிகள் உறுதியளித்துள்ளனர்

## அகதிகளுக்கான ஐ.நா.அதிகாரி தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியமுன்னணி அரசுடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் பேணிப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக விடுதலைப் புலிகள் என்னிடம் உறுதியளித்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய நிறைவேற்றுக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாடு உட்பட வடபகுதியில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் கடந்த மூன்று நாட்களாக மேற்கொண்ட விஜயத்தை அடுத்து. கொழும்பு திரும்பிய அவர் அங்கு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(12ம் பக்கம் பார்க்க)

## ஐ.சு.மு. ஆட்சிக்கு வந்தால் எனக்கே பிரதமர் பதவி

### டி.எம்.ஜயரட்ணா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால், தனக்குப் பிரதமர் பதவி தரப்படவேண்டுமென்று டி.எம். ஜயரட்ணா கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இறந்த பின்னர், அப் பதவிக்கு ரட்ண ஸ்ரீ விக்கிரம நாயக்காவை ஜனாதிபதி சந்திரிகா நியமிக்க முன்னர், தன்னிடம் அது குறித்து ஆலோசித்ததாகவும், அதற்கு தான் சம்மதம் தெரிவித்த போதும், அடுத்ததொரு சந்தர்ப்பம் தனக்கே வழங்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டதாகவும் ஜயரட்ணா நினைவுபடுத்தினார்.

இதேவேளை காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா 1951ம் ஆண்டு சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த காலத்திலிருந்து தான் அதில் ஈடுபட்டு வருவதாகவும், அதனை இன்றைய ஜனாதிபதியும் நன்கறிவார் எனவும், ஜயரட்ணா சுட்டிக்காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-6)

# கூட்டணி தொடர்பான தீர்மானங்களை எனது அனுமதி இன்றி எடுக்க வேண்டாம்

## ஆனந்தசங்கரி சம்பந்தனுக்கு கடிதம்

(கொழும்பு)

தனது அனுமதியின்றி தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்பான எவ்வித தீர்மானங்களையும் எடுக்க வேண்டாம் எனவும், அவ்வாறில்லாது தீர்மானங்களை எடுக்கும் பட்சத்தில நீதிமன்றத்தின் ஆணையை மீறிய குற்றத்திற்கு ஆளாகி அதற்குரிய பலாபலன்களை அனுபவிக்க நேரிடுமெனச் சுட்டிக்காட்டி கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, செயலாளர் இரா.சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான எந்தவிதமான தீர்மானங்ளையோ, அல்லது முடிபுக்களையோ கட்சியின் தலைவர் என்ற முறையில் எனது அனுமதியின்றி கட்சியின் செயலாளர் நாயகமாகிய நீங்கள் எடுப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் 11-02-2004ம் திகதி வழங்கிய தீர்ப்பில் தடைவிதித்துள்ளது என்பதை உங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

ஏப்பிரல் 2ம் திகதி பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளமையால் மிகக் கூடுதலான பிரதிநிதித்துவத்தை எமது கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் உருப்படியான தீவிர அரசியலில் நாம் ஈடுபட வேண்டிய நேரம்

(12ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெற் உலகம்

# தொடருக்காகக் காத்திருக்கிறது



1984 இல் லாகூரில் நடைபெற்ற இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டித் தொடரின் போது இந்திய அணியின் தலைவர் கபில்தேவ் (வலது) பாகிஸ்தான் அணியின் தலைவர் இம்ரான் கான் (இடது) ஆகியோர் சந்திக்கும் காட்சி.

இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற விருக்கின்ற கிரிக்கெற் தொடருக்காக அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் இத் தருணத்தில் நாளுக்குநாள் ரசிகர்களின் ஆவலைத் தூண்டுகின்ற செய்திகளே வெளிவந்த வண்ணம் இருக்கின்றது.

நேற்று பாகிஸ்தான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் சஹாரீயாகான் அதிர்ச்சியூட்டும் இன்னொரு தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தப் போட்டித் தொடர் நடைபெறாது விட்டால் சுமார் 4 மில்லியன் பவுண் பெறுமதியான வருமானத்தைப் பாகிஸ்தான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை இழக்கும். ஆகையினால் பாகிஸ்தான் இதற்கு நஷ்ட ஈடு கோரும் எனக் கூறினார்.

மிகுந்த எதிர்பார்ப்போடும் ஆவலோடும் இருக்கும் ரசிகர்களை இந்தியா ஏமாற்றாது எனநம்புகிறோம் என்றார். (யே)


## விளையாட்டுச் செய்திகள்

### "முரளிதரனைக் கவனிப்போம்"

### பொண்டிங் தெரிவிப்பு

இப்பொழுது நாங்கள் ஒரு நாள் தொடர்களை மிக அற்புதமாக விளையாடி வருகின்றோம். இலங்கையுடன் 5 ஒருநாள் தொடரிலும் 3 டெஸ்ட் தொடரிலும் விளையாடவுள்ளோம். முத்தையா முரளிதரனைக் கவனத்தில் எடுக்காமல் விடமுடியாதது மட்டுமல்ல அவரை எதிர்கொள்வது என்பது இலகுவான காரியமும் இல்லை. ஆனால் அவருக்கு மிகுந்த அழுதங்களை ஏற்படுத்தலாம் என்று தான் நம்புவதாகச் சொன்ன அவுஸ திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங், ஸ்டீவ்வோ இளைப்பாறிய பின் டெஸ்ட் கப்டனாக முதன் முதலில் மேற்கொள்ளவுள்ள வெளிநாட்டு சுற்றுப் பயணம் இது வாகும்.

உள்நாட்டைப் போலவே வெளி நாடுகளிலும் அவுஸ்திரேலியர்கள் தரமான கிரிக்கெற்றை ஆடவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். (யே)



அண்மையில் ஓய்வுபெற்ற உலக அதிபாரக்குத்துச்சண்டை சம்பியன் லெனெக்ஸ் லூயிஸ் (வலது) முன்னாள் உலக அதிபாரக் குத்துச் சண்டைச் சம்பியனும் மிகப் பிரபலமான வீரருமான மைக்டைசனுடன் செய்தியாளர் மாநாட்டில் ஒரு போட்டியின் பின்னர் பங்கெடுத்தபொழுது பிடிக்கப்பட்ட படம். (யே)

# சிம்பாப்வேக்கு ஸ்ருவர்ட் எச்சரிக்கை செய்கிறார்

சிம்பாப்வே நாட்டுக்கு கிரிக்கெட் பயணம் மேற்கொண்டு சிம்பாப்வே செல்லக்கூடாது என இங்கிலாந்து கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் அலெக்ஸ் ஸ்ருவர்ட் தெரிவித்துள்ளார். பாதுகாப்புப்பயம் காரணமாகவே சிம்பாப்வே பயணம் குறித்து இறுதி முடிவை அறிவிக்க இங்கிலாந்து கிரிக்கெற் சபை தாமதப்படுத்தி வருகிறது. சிம்பாப்வேக்கு செல்லக் கூடாது என இங்கிலாந்து அரசு இங்கிலாந்து கிரிக்கெற் சபையை வற்புறுத்தியுள்ளது.

இந் நிலையில் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும், அவ்வணியின் விக்கெற் காப்பாளருமான அலெக்ஸ் ஸ்ருவர்ட் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

சிம்பாப்வே ஒரு அற்புதமான நாடு நான் விளையாடிய காலகட்டத்தில நான் அங்கு சென்று விளையாடி இருககின்றேன். சிம்பாப்வேயில் இருந்து வரும் நிலைமை மாறாவிட்டால் இங்கிலாந்து அணி அங்கு செல்லக் கூடாது என்பது தான் என் கருத்து இது மிகவும் வருத்தமானதாகும். கிரிக்கெற் விளையாடத்தான் இங்கிலாந்து கிறிக்கெற் வீரர்கள் இருக்கின்றார்கள். சிம்பாப்வே சென்று அந் நாட்டு கிரிக்கெற் ரசிகர்களை மகிழ்விப்பது வீரர்களின் கடமைதான். ஆனால் அந் நாட்டின் நிலைமை மாறவேண்டும். 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் சிம்பாப்வேயில் உள்ள ஹாராரேயில் நடைபெற இருந்த போட்டியை இங்கிலாந்து புறக் கணித்தமையை அவர் நினைவுபடுத்தினார். (யே-121)

# கால் பந்து வீரர் சுட்டுக் கொலை

(கொலம்பியா)

கொலம்பியா நாட்டின் முன்னாள் சர்வதேச கால்பந்து வீரர் அல்பெய்ரோ யுசுரியாகா (37) புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார். தனது நண்பர்களுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாதவர்களால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக கொலம்பிய பொலிஸார் தெரிவித்தனர்.

கைத்துப்பாக்கியால் யுசுரியாகா சுடப்பட்டுள்ளார். அவரது உடலில் பல குண்டுகள் பாய்ந்துள்ளன. குற்றவாளி யார் எனத் தெரியவில்லை என அந்த அதிகாரி தெரிவித்தார். கொலம்பியாவில் உள்ள முன்னிலை அணிகளில் ஒன்றான நாசியானல் மெடலின் கிளப்புக்காக பல்வேறு ஆட்டங்களில் விளையாடியுள்ளார் யுசுரியாகா.

1989இல் தென் அமெரிக்க கிளப் சாம்பியன் பட்டத்தை மெடலின் கிளப் வென்றபோது யுசுரியாகா அந்த அணியில் இடம்பெற்றிருந்தார். அத்துடன், 1990இல் இத்தாலியில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியில் கொலம்பியா தகுதி பெற அவர் முக்கிய காரணமாக இருந்துள்ளார். (யே)

# ஃபரீனா எலியா, கால் இறுதியில்

(பிரான்ஸ்)

பாரீஸில் நடைபெற்று வரும் 5,85,000 அமெரிக்க டாலர்கள் பரிசுத் தொகை கொண்ட கேஸ் டி பிரான்ஸ் டென்னிஸ் தொடரில் இத்தாலிய வீராங்கனை ஃபரீனா எலியா மகளிர் ஒற்றையர் கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

உலக தர வரிசையில் 20 வது இடத்திலுள்ள எலியா, ஸ்லோவேனியா நாட்டைச் சேர்ந்த டினா பிஸ்னிக் என்பவரை 63 நிமிட ஆட்டத்தில் 6-0, 6-4 என்று வீழ்த்தினார்.

இந்த டென்னிஸ் தொடரில் காலிறுதிச் சுற்றுக்கு தகுதி பெறும் முதல் இத்தாலிய வீராங்கனை இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 2 வது சுற்றுப் போட்டிகளில் ரஷ்ய வீராங்கனை எலேனா போவினா, ஸ்பெயின் வீராங்கனை மெடினா கேரிக்ஸ் என்பவரை 6-4,6-2,6-4 என்று வீழ்த்த கடுமையாக போராட வேண்டியிருந்தது.

இன்று நடைபெறவுள்ள போட்டியில் கிம் கிளிஸ்டர்ஸ் ஸ்பெயின் வீராங்கனை மரியா சான் சேஸ் லாரென் ஸோ என்பவரைச் சந்திக்கிறார். (யே)

# வட - கிழக்கில் உதைபந்தாட்டத்தை ஊக்குவிக்க நடவழிக்கை!

வட-கிழக்கு மாகாணத்தில் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை குறிப்பாக கால் பந்தாட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு 5 மைதானங்களை அமைத்துக் கொடுக்க சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் முன்வந்துள்ளது. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் காலஞ் சென்ற ஜே. எஸ்.என்.ஆனந்தராஜா வடக்குக் கிழக்கு மாகாண கால்பந்தாட்ட தலைவராக இருந்த காலத்தில் விடுத்த வேண்டுகோளுக்கமைய இதற்கான நிதியுதவியை வழங்க சர்வதேச கால் பந்தாட்ட சம்மேளனம் முன்வந்துள்ளது. சர்வதேச கால் பந்தாட்ட சம்மேளனத்தின் ஐக்கிய நாடுகள் புனர் நிர்மாண நிதியத்தின் ஊடாக இந்த நிதியுதவி வழங்கப்படும் என இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முகாமைத்துவத் தலைவரும் ஆசிய கால்பந்தாட்ட பேரவையின் உப தலைவர்களில் ஒருவருமான மணிலால் பெர்ணாண்டோ தெரிவித்தார். இதேவேளை, வடக்குக் கிழக்கு மாகாண கால்பந்தாட்ட அபிவிருத்திக்கென ஆரம்பிக்கப்பட்ட ஆனந்தராஜா நினைவு நிதியத்துக்கு அண்மையில் ஆசிய கால்பந்தாட்ட பேரவை நிதியுதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (யே-121,61)

# மத்திய மாகாண அணிக்கு இறுதிப் போட்டியில் வெற்றி

(கொழும்பு)

இலங்கையில் மாகாணங்களுக்கிடையில் நடைபெற்ற கிறிக்கெற் சுற்றுப்போட்டியில் முத்தையா முரளிதரன் தலைமையிலான மத்திய மாகாண அணி சம்பியனானது. ஆர்பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் வட மத்திய மாகாண அணியை எதிர்த்து விளையாடிய மத்திய மாகாண அணி 176 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. 374 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய மத்திய மாகாண அணி 197 ஓட்டங்களை மட்டும்பெற்று தோல்வியடைந்தது. இவ் அணி சார்பில் கடைநிலை வீர ரான அகில ங்க கனகே 42 ஓட்டங் களைப் பெற்றார். பந்து வீச்சில் மதத்திய மாகாண அணி சார்லின் னுவன் சொய்சா 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக் களைக் கைப்பற்றினார். (யே,ச-121)

# யாழ்.மாவட்டத் துடுப்பாட்ட அணி பரிஸ் அணியுடன் மோதுகிறது

தமிழீழ தேசிய விளையாட்டு விழாவிற்கான யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ் அணி தமிழீழ தேசிய விளையாட்டு விழாவில் கலந்து கொள்வதற்கு முன்பு ஓர் முன்னோடிப் போட்டியாக இன்று 15.02.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில், சிறந்த ஓர் அணி என கருதப்படுகின்ற மானிப்பாய் பரிஸ் அணியுடன் மோதவுள்ளது.

யாழ்.மாவட்ட அணி விபரம்

1) ரி. கௌரிபாகன் -தலைவர் (யாழ்.பல்கலைக்கழகம்)
2) எஸ்.லக்சுமிகாந்த் -உபதலைவர் (ஜொலிஸ்ரார் வி.க)
3) என்.சிவராசா (ஜொலிஸ்ரார் வி.க)
4) ஆர்.கிருஸ்ணராசா (ஜொலிஸ்ரார் வி.க)
5. எஸ். தணஸ்காந்தன் (யாழ்.பல்கலைக்கழகம்)
6. எஸ்.பிருந்தாவன் (சென்றலைட்ஸ் வி.க)
7) பீ.ஜெயரூபன் (மானிப்பாய் பரிஸ் வி.க)
8) பி.சாள்ஸ் (சென்றலைட்ஸ் வி.க)
9) ரி.றொபேசன் (யாழ்.பல்கலைக்கழகம்)
10 ரி.யதார்த்தன் (யாழ்.பல்கலைக்கழகம்)
11) எஸ். குணதாஸ் (ஸ்ரான்லி வி.க)
12) பி.சிவாஸ்கர் (மானிப்பாய் பரிஸ் வி.க)
13) எஸ்.மகேந்திரராஜா (ஜொலிஸ்ரார் வி.க)
14. ரி.சிற்சபேசன் (கே.சீ.சீ.சீ.வி.க)
15. எஸ்.சுபாஸ்கரன் (யாழ்.பல்கலைக்கழகம்)

யாழ். மாவட்ட அணி 20 ஆம் திகதி ஆரம்பமாகும் தமிழீழ தேசிய விளையாட்டு நிகழ்வில் கலந்து கொள்ளுவார்கள். இவர்கள் 23.02.2004 அன்று கிளிநொச்சி மாவட்ட அணியுடன் மோதவுள்ளனர் என்பதை யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் அறிவிக்குள்ளார். (யே)



# அரசியல்வாதிகள் தான் இனங்களின் முரண்பாடுகளுக்கு காரணகர்த்தாக்கள்

## முன்னாள் எம்.பி. கனீபா சாடல்

(கொழும்பு)

**இனங்களுக்கிடையே முரண்பாடுகளும் மோதல்களும் உருவாகுவதற்கு காரணமாக விளங்கியவர்கள் அரசியல்வாதிகளே. அவர்கள் சுய அரசியல் இலாபங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இனங்களுக்கிடையே குரோதங்களை வளர்த்துவிட்டார்கள். இத்தகைய அரசியல்வாதிகள் இனங்களைப் பாகுபடுத்தி வேறுபடுத்தி தம்மின மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்க தேர்தல் காலங்ளை மிகவும் திறமையாகத் திட்டமிட்டுப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.**

இவ்வாறு பிரபல கவிஞரும், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் முதன் முதலாக தேர்தலில் வெற்றி பெற்றவருமான எஸ். எல். எம் கனீபா தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தினால் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கவிஞர் இக்பால், ஜனாதிபதி ஊடகப் பிரிவிவைச் சேர்ந்த எ.ஐ.எம். கலீல் ஆகியோரும் கலந்துகொண்டு "இன ஒற்றுமை" குறித்து கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

அந்த வகையில் எஸ். எல். எம். கனீபா கருத்துத் தெரிவிக்கையில்,

எமது நாட்டிலே சகல இனங்களும் முன்னர் மிக ஒற்றுமையாக வாழ்ந்தன என வரலாற்று நூல்கள் மூலம் அறிந்திருக்கிறோம். அந்நிய நாட்டு ஆக்கிரமிப்பு காரணமாக நமது நாட்டில் முன்னர் போர் நடந்தது.

ஆனால், தற்போது எமது நாட்டுக்குள்ளே வாழும் மக்களிடையில் போர் ஒன்று வெடித்து மக்களை மிகவும் பாதித்திருக்கிறது. இதனைத்தான் எதிர்கால வரலாற்று நூல்கள் எடுத்துக்கர்ட்டப்போகின்றன.

இதனால் நமது நாட்டில் வாழும் மக்களிடையே வளரும் பகைமை மேலும் அதிகரிக்கப் போகின்றது.

இத்தகைய இன ஒற்றுமைச் சீர்குலைவுக்கு பிரதான காரணமாக விளங்குபவர்கள் அரசியல்வாதிகள் என்பதைத்தான் மீண்டும் மீண்டும் கூறுகினறேன்.

### இனப்படுகொலை

இவர்களின் பின்னணியில் தான் இனப்படுகொலைகள் நடைபெற்ற தினங்கள் கொண்டாடபபட்டு, பழைய கசப்பான சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தப்படுகின்றன.

குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளால் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட தினததை முஸ்லிம்கள் கொண்டாடுகிறார்கள்.

அதேபோன்று முஸ்லிம்களுக்கும்-தமிழ் மக்களுக்கும் இடையே இடம்பெற்ற கைகலப்பில் மரணமடைந்த தமிழ்மக்களை நினைவுகூரும் தினத்தை தமிழ் மக்களும் இன்றுவரை கொண்டாடி, தமிழ்-முஸலிம் மக்களுக்கிடையிலான ஒற்றுமையை மேலும் சீரழித்துவிடுகிறார்கள்.

எனவே, இனிவரும் காலத்திலாவது தமிழ்-முஸ்லிம் மக்கள இத்தகைய நினைவு தினங்களைக் கொண்டாடி பழையதைப் புரட்டிப் பார்ப்பதைக் கைவிட வேண்டும்.

### இன ஒற்றுமை

அத்துடன், முஸ்லிம்கள் தமிழ் மக்களை தமது சகோதர இனமாக நேசிக்க வேண்டும். அதேபோன்று தமிழ் மக்களும் முஸ்லிம்களை மதித்து தமது சகோதர இனமாக ஏற்றுக்கொண்டு அவர்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டும்.

இதேவேளை, நாட்டின் இன ஒற்றுமைக்கு நாட்டுத் தலைவர்களின் பங்களிப்பும் பணியும் மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது.

ஆனால் எமது நாட்டில் இருந்த தற்போது இருக்கின்ற தலைவர்கள் எல்லாம் "இன ஒற்றுமை" யைத் திரும்பிக் கூடப்பார்ப்பதில்லை.

மாறாக அதிகாரமோகம் பிடிததவர்களாகவும் அரசியல் இலாபம் தேட முயல்பவர்களாகவும் இருக்கின்றனர்.

இவர்களிடம் ஆணவமே அதிகமாக இருக்கும். தங்கள் செல்வாக்கிற்காக இவர்கள் எதையும் செய்வார்கள். மாற்றுக் கருத்துக்களைக் கூறுபவர்களை எதிரியாக எண்ணுவார்கள்.

அத்துடன், மக்களை முறையாக இவர்கள் வழிநடத்த மாட்டார்கள். மாறாக மக்கள் தான் இவர்களை வழிநடத்த வேண்டும் என்றார்.

இன ஒற்றுமைக் கவிஞர் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில, நண்பர் கனீபா கூறியது போல இனப்படுகொலை இடம் பெற்ற தினங்களை முஸ்லிம்-தமிழ் மக்கள் கொண்டாடுவதன் மூலம் இவ்விரு இனங்களுக்கிடையிலான பகைமை மேலும் வளர்கிறது.

இதனால் இவ்வாண்டிலிருந்து இனபபடுகொலை நினைவு தினங்களைக் கொண்டாடி இன ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிப்பதைத்தவிர்த்துக் கொள்ளுமாறு இரு சமூகங்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

### சமாதான ஒற்றுமை

அத்துடன், இலங்கையில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்த சகல இனமக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதற்கு முன்னர் இனங்களுக்கிடையே ஒற்றுமை வளர்க்கப்பட வேண்டும்.

குறிப்பாக தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை வளர்க்கப்பட்டால் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கண்டுவிட முடியும் என்பது எனது எதிர்பார்ப்பாகும் என்றார்.

இன ஒற்றுமை குறித்து ஜனாதிபதியின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த ஏ.ஐ.எம். கலீல் கருத்துத் தெரிவிக்கையில்,

### பங்களிப்புப்போதாது

இன ஒற்றுமைக்கு நாட்டுத் தலைவர்கள் ஆற்றிய பங்களிப்புப் போதாது. அவர்கள் அதிகாரங்களைப் பறிப்பதிலும் பதவிகளைக் கட்டிப்பிடிப்பதிலேயேயுமே அதிக ஆர்வம் காட்டுகிறாகள் என நண்பர் கனீபா கூறியிருந்தார்.

இங்கு எமது நாட்டிலே இரு தலைவர்கள் இருக்கின்றார்கள். ஒருவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றையவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

### ஜனாதிபதியின் அர்ப்பணிப்பு

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் இன ஒற்றுமையை ஏற்படுத்தும் விடயத்தில் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந் நாட்டில் வாழும் எல்லா சமூகங்களையும் ஒரே பார்வையில் நேசிப்பவர். அனைவரும் ஒற்றுமையாகவும் மனிதநேயத்துடனும் சந்தோசமாக வாழவேண்டும் என்ற விருப்பம் உடையவர்.

இதனை ஜனாதிபதியின் தோதல் காலத்தில் ஜனாதிபதி பெரும்பான்மையின மக்களைப் பார்த்து கேட்ட கேள்வி ஒன்றினூடாக நான் நன்கு விளங்கிக் கொண்டேன்.

"தமிழ் மக்களை பெரும்பான்மையின மக்களாகிய நீங்கள் நேசிக்கவேண்டும். அவர்களும் இந்நாட்டில் வாழும் சகோதர இனம் என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்று ஜனாதிபதி பெரும்பான்மையின மக்கள் மத்தியல் பேசியபோது கூறினார்.

இக்கருத்திற்கு மக்கள் கடும் எதர்ப்புத தெரிவித்தனர். மக்களின எதிர்ப்பைக்கண்டு அதிர்ச்சியடைந்த ஜனாதிபதி "அப்படியானால் இந்நாட்டில் வாழும் தமிழ்-முஸ்லிம் மக்களை கடலில தூக்கி எறியவா சொல்கின்றீர்கள்?" எனக்கேட்டார்.

இதனையடுத்து பெரும்பான்மையின மக்களில் சிலர் அடங்கிப் போனார்கள். சிலர் தமிழ்-முஸ்லிம் மக்களை கடலில் தூக்கி எறியவா சொல்கின்றீர்கள்? எனககேட்ட அடுத்த சில நிமிடங்களில் ஜனாதிபதியின் உருவப்படத்திற்கு பொட்டு வைத்து கேலி செய்தார்கள்.

ஆனால், ஜனாதிபதி அதனை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

நாட்டில் இன ஐக்கியம் உருவாக வேண்டும் என்பதற்காக மிகவும் கடுமையாகப் பாடுபட்டார். தற்போதும் அத்றகாகப் பாடுபட்டு வருகிறார்.

அத்துடன், தமிழ்பேசும் மக்களுக்கு பிரச்சினை இருக்கின்றது. அந்தப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதை முதன் முதலில் ஏற்றுக்கொண்ட சிங்கள இனத் தலைவி என்ற பெருமையும் இவருக்கே இருக்கின்றது. அது மட்டுமன்றி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே முதன் முதலில் நோர்வே அரசின் பிரதிநிதிகளை அழைத்து, இலங்கையின் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அனுசரணையாளராகக் கடமையாற்றுமாறு கேட்டுக்கொண்டவர் என்றார்.

(தி-60,10)


# மக்கள் வங்கி

**மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளையிலும்,**
**யாழ். பல்கலைக்கழகக் கிளையிலும்**
**(முன்னைய யாழ். நவீன சந்தைக் கிளையிலும்)**
**31.12.1984ஆம் திகதிக்கு முன்பு**
**அடகு வைத்து மீட்கப்படாத நகைகள்**
**பின்வரும் திகதிகளில்**
**யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து**

## பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்

| கிளைகளின் விபரம் | ஏலம் விடப்படும் திகதிகள் | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| சாவகச்சேரி | 14.02.2004 இல் இருந்து 16.02.2004 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| யாழ்.பல்கலைக்கழகக் கிளை (முன்னைய யாழ். நவீன சந்தைக்கிளை) | 21.02.2004 இல் இருந்து 23.02.2004 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

**பிரதேச முகாமையாளர்,**
**மக்கள் வங்கி.**

(C/7271)

## இன்று ஒரு தகவல்

# சும்மா இருக்கின்ற சங்கை

சும்மா இருக்கின்ற சங்கை ஊதிக்கெடுத்து விட் டான் சார் என்று நாம் பல சந்தர்ப்பங்களில் கூறுவது உண்டு. அமைதியாக இருக்கின்ற ஒருவிஷயத்தில் அனா வசியமாகத் தலையிட்டு விவகாரத்தைப் பெரிதாக்கி விடுபவர்களுக்கு இந்த உதாரணம் பொருந்தும். ஆனால் அந்தப் பழமொழி உண்டான விதம் எப்படி என்பது பற்றி ஒரு பெரியவர் மகாபாரதத்திலிருந்து சில சம்பவங் களைக் கூறினா்.

கிருஷ்ணன் மீது எப்போதும் 5 பொருட்கள் இருக் கும. அவை என்னென்ன? சங்கு, சக்கரம், வில், வாள், கதை இந்த ஐந்தும் கிருஷ்ணரிடம் இருக்கும். பக்தியுடன் கிருஷ்ணரைப் பார்ப்வர்களுக்கு இவை ஆப ரணங்களாகத் தெரியும்! எதிரிகளுக்கு இவை ஆயு தங்களாகத் தெரியும்.

சக்கரம், வில், வாள், கதை போன்றன ஆயுதங்கள் என் பது சரி ஒத்துக்கொள்ளபடக்கூடியது. சங்கு எப்படி ஆயுதமாகும்? இப்படித்தான் துரியோதனன் நினைத்து ஏமாந்து போனான் என்பது அந்தப் பெரியவருடைய கருத்து.

கண்ணனுடைய உதவி வேண்டும் என்பதற்காக அர்ஜு னனும் துவாரகைக்குப் போனான். துரியோதனனும் போனான். "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் கிருஷ்ணர். செருவில் நீ எனக்கு வெம்போர் செய்துணையாக வேண்டும் என்றனர். அதாவது வரப் போகும் போரில் நீ எமக்கு உதவியாக இருக்க வேண் டும் என்று கேட்டனர்.

கிருஷ்ணா என்ன சொல்கிறார் "தருமனுக்கு உதவி செய்வதாக முன்பே வாக்குக் கொடுத்துவிட்டேன்" என்கிறார். "சரி... அப்படியென்றால் நீங்கள் ஆயுதங் களைக் கொண்டு போர் செய்யக் கூடாது" என்று வேண் னான் துரியோதனன். கிருஷ்ணர் யோசித்தார். சரி என்று ஒத்துக் கொண்டார். துரியோதனனுக்கு இதைக் கேட்டதும் மிக்க மகிழ்ச்சி.

அர்ஜுனன் கிருஷ்ணரிடம் என்ன கேட்டான் "நீங்கள் எனக்குச் சாரதியாக வேண்டும்! என்று. சரி என்று ஒத் துக் கொண்டார் மகிழ்வுடன். ஏனென்றால் தேர் செலுத் துமசாரதிக்குத்தான் எஜமானின் வெற்றியை அறிவிப் பதற்காக அடிக்கடி சங்கை ஊதும் உரிமை உண்டு.

கிருஷ்ணனுடைய பாஞ்சஜன்யம் என்ற சங்குக்கு எவ் வளவு பலம் உண்டு என்ற விஷயம் துரியோதனனுக் குத் தெரியவில்லை. சண்டை நடந்த போதுதான் அதன் சகதி எப்பேர்பபட்டது என்பதை அவன் புரிந்து கொண்டான்.

போர் நடக்கும் சமயத்தில் கிருஷ்ணன் சங்கு ஊதிய போதெல்லாம் ஆயிரக்கணக்கான கௌரவ வீரர்கள் எப்படி மடிந்தார்கள் என்பதை நேரில் பார்த்தான் துரியோ தனன் . அதன் பின்தான் யோசித்தான் கிருஷ்ணரது சங் கும ஒரு ஆயுதமாகிவிட்டதே! அவா சும்மா இருக்கின்ற சங்கை ஊதிக்கெடுக்கின்றாரே! என்பதை உணர்ந் தான் துரியோதனன்.

இந்த அடிப்படையிலே உருவான பழமொழிதான் சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் என்பது! அந்தப் பழமொழியைத்தான் நாம் இப்போது எப்படியெல் லாமோ உபயோகப்படுத்துகின்றோம். அது இருக்கட் டும் இப்போது நாம் கதைக்கு வருவோம்.

ஒருவன் கூறினான் "சார் நான் நட்புக்காக எதையும் செய் வேன். நண்பனுக்கு ஒரு ஆபத்து என்றால் உடனடியாக எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்துவிடுவேன்.

நேற்று அப்படித்தான் நானும் எனது நண்பனும் சினிமா பார்த்துவிட்டு வயல் வெளிவழியாக நடந்து வந்து கொண்டிருந்தோம். திடீரென்று அவன் கால் தவறி ஒரு கிணற்றில் விழுந்து விட்டான். உடனே நான் என்ன செயதேன் தெரியுமா? ஒரே ஓட்டமாக ஓடிப்போய் மேலத் தெரு மணியை அழைத்துக் கொண்டு வந்து விட் டேன்" எனறான். "ஏன்?" என்று கேட்டேன். "அவன் தான் சார்... சவ ஊர்வலத்தில் நன்றாக சங்கு ஊதுவான் " என்கிறான.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கூட்டமைப்பினர் இன்று கொழும்பில் கூடி ஆராய்வு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எந்தக்கட்சியின் கீழ் அல்லது எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது குறித்து இன்று கொழும்பில் கூடி ஆராயவுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி தொடர்பாக எழுந்துள்ள சட்டச் சிக்கல் நிலை காரணமாக இது குறித்து ஆராயவேண்டியுள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழர்விடுதலைக்கழகம், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ்அணி), அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் செயற்குழு உறுப்பினர்கள் அடங்கிய செயற்குழு வொன்று இன்று கொழும்பில் கூடி இதுதொடர்பாக ஆராய வுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது குறித்து சட்டவல்லுநர்களுடன் தமிழத தேசியக்கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் ஆராய்ந்து வருகின்றனர். (தி-62)

# கட்சிகள் ஒன்று சேரும் பட்சத்தில் முஸ்லிம் பிரச்சினைக்கு முடிவு வரும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கோரிக் கைகளையும் கொள்கைகளையும் ஏற்கும் எந்த வொரு கட்சியுடனும் சேர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதாக கட்சியின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித் துள்ளார்.



பொதுத்தேர்தல் குறித்து செய்தி நிறுவனம் ஒன் றிற்கு அவர் வழங்கிய விசேட பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஹக்கீம், கடந்த காலங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுத்தருவதாகக் கூறிய எந்தவொரு அரசாங்கமும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

இதுபோன்றே சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் தனித்தரப்பாக பங்குபற்றவில்லை. கடந்தகால 6 கட்டப் பேச்சுவார்த்தைகளிலும் அரச தரப்பு பிரதிநிதியாகவே நான் கலந்துகொண்டேன்.

இவ்வாறு கடந்த காலங்களைப்போன்று ஏமாற்றும் கட்சிகளுடன் கூட்டுச்சேர எமது கட்சி இடமளியாது. மாறாக முஸ்லிம்மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து கொள்ளும் எந்தவொரு கட்சியும் உறுதிதரும் பட்சத்தில் அதனோடு கூட்டுச்சேர்ந்து பொதுத்தேர்தலில் போட்டியிட நாம் தயாராகவுள்ளோம்.

இதேவேளை, இப்பொதுத்தேர்தல் மூலம் பிரிந்து சென்றுள்ள அனைத்து முஸ்லிம் கட்சிகளும் ஒன்று சேரும் பட்சத்தில் முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீாவுகாண முடியும் என்றார். (தி-61)

# ஊர் திரும்பிய தமிழர்களுக்கு தேர்தல், அறிவிப்பு ஓர் அச்சுறுத்தல்

## ஐ.நா. மனித உரிமை அதிகாரி கருத்து

(கொழும்பு)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் வடக்கு-கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து மீண்டும் நாடு திரும்பி தற்காலிகமாக வாழும் 3 இலட்சத்து 80 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்களுக்கு தேர்தல் அறிவிப்பு மிகவும அச்சததையும் அசௌகரியத்தையும் ஏற்படுததியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் ஜெனீவாவுக்கான நிரந்தர பிரதிநிதியும், எக்ஸ் கொம் அமைப்பின் அதிகாரியுமான ஜீன்-மார்க் போல்காரீஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக வாழும் தமிழ் மக்களை படிப்படியாக மீளக் குடியேற்றும் நடவடிக்கைகளை யு.என். எச்.சி. ஆர். நிறுவனம் துரிதமாகவும், திட்டமிட்ட வகையிலும் மேற்கொண்டு வருகிறது. இந் நிலை யில் திடீரென அறிவிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தல் மிகுந்த சிரமங்களை உண்டுபண்ணியுள்ளதுடன், இத்தகைய மனிதநேயப் பணிகளுக்கு முழுமையான தடையாகவும் அமைந்துள்ளது.

கடந்த 3 தினங்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மற்றும் புத்தளம் போன்ற இன்னும் பல பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டு நாம் விரிவான ஆய்வுகளை நடத்தினோம். விடுதலைப் புலிகள் சமாதான தீர்வில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருப்பதையும், அதற்காக முழுமையான ஒத்துழைப்புத்தர அவர்கள் ஆர்வமாயிருப்பதையும் அவதானித்ததுடன், இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்புக் கேள்விக்குறியாகியிருப்பதை ஆழ்ந்த கவலையுடன் கவனித்தாகவும் ஜீன்-மார்க் போல்காரிஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார். (தி-18)

## இராசிபலன்

15. 02. 2004

(மாசி 03, ஞாயிற்றுக்கிழமை)

| | | |
|---|---|---|
| தசமி | நள்ளிரவு 12.12 | மணிவரை |
| கேட்டை | முன்னிரவு 8.19 | மணிவரை |
| இராகுகாலம் | 5.03-6.33 | மணிவரை |
| சுபநேரம் | 9.33-11.03 | மணிவரை |

**மேடம்**
வீண்பயம, போசன சுகம், காரிய தாமதம், குடும்பக் கவலை.

**இடபம்**
தேக நலன், தெய்வ சிந்தை, முயற்சி கைகூடும், பிரயாண நன்மை.

**மிதுனம**
புதிய சிந்தை, போசன நன்மை, காரிய நன்மை, உடல் நலம்.

**கடகம்**
தாழ்ந்த சுபாவம், சொத்துக்களால் கவலை, முயற்சி தாமதம், வாக்கு மேன்மை.

**சிங்கம**
ரோக நிலை, பிறருக்கு உதவுதல், மனக் குழப்பம், முயற்சி தாமதம்.

**கன்னி**
சகோதரர் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும், தனஇலாபம, பெரியோர் மதிப்பு.

**துலாம்**
வீண் பகை, திடீர் நன்மை, விவாதம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**
தெளிந்த சிந்தை, சயன சுகம், உறவினர் சந்திப்பு, தேக நலன்.

**தனுசு**
பிரயாண அலைச்சல், திடீர் நன்மை, புதிய முயற்சி, இன சனத் தொடர்பு.

**மகரம்**
உறவினர் உதவி, கீர்த்தி, காரிய நன்மை, உடல் நலம்.

**கும்பம்**
நிலை மாற்றம், தொழில் சிந்தை, பிரயாணம், ஆரோக்கியம்.

**மீனம்**
சரீரப் பிரயாசை, களஸ்திர நன்மை, இடமாற்றம், போசன நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# கட்சி உறுப்பினர்கள் பேதங்களை மறந்து செயற்பட வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள்

(கொழும்பு)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சகல உறுப்பினர்களும் தமக்கிடையிலான பேதங்களை மறந்து ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை தங்காலையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களின கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் நாம் பாரிய வெற்றி பெறவேண்டுமாயின், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் தமக்கிடையிலான கசப்புணர்வுகளை மறந்து, மக்கள் விடுதலை முன்னணியுடன் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பின் வெற்றிக்காக ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும். உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படவேண்டியது மிகவும் இன்றியமையாததொன்றாகும்.

அத்துடன், நாட்டில் நிலவும் முக்கியமான பிரச்சினையான வேலையில்லாப் பிரச்சினைக்கு துரிதமான தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய முயற்சிகள் முன்னெடுக்கப்படும். இதனூடாக நாட்டின வளங்களைப் பாதுகாத்து பொருளாதாரத் துறையினை மிகவும் முன்னேற்றகரமாக அபிவிருத்தியடையச் செய்வதுவே ஸ்ரீலங்கா சுதநதிரக்கட்சியினதும், மக்கள் விடுதலை முன்னணியினதும் பொதுநோக்கமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (தி-18)

# பொதுக்கூட்டம்

(கல்வயல்)

அரியாலை ஐக்கிய கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அரியாலை சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (தி-36)

## தராசு படிகளுக்கு முத்திரையிடல்

நல்லூர் பிரதேச சபை எல்லைக் குட்பட்ட வர்த்தக நிலையங்கள், சந்தைகள் மற்றும் ப.நோ.கூ. சங்கங்கள் ஆகியவற்றில் பாவனையிலுள்ள நிறுவைகள், அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு (தராசு, படி) முத்திரையிடப்படவுள்ளது.

இவற்றிற்கான முத்திரையிடும் வேலைகள் எதிர்வரும் 16,17,20, 23,24,26,27 ஆம் திகதிகளில் நல்லூர் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் காலை 9.00 மணிமுதல் பி.ப 1.30 மணிவரை நடைபெறவுள்ளது.

எனவே, அனைவரும் இச் சேவையின் போது, தமது நிறுவைகள், அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார். (தி-18)

## சனசமூக நிலையம் திறப்பு

நுணாவில் மத்திய சர்வ சாதனா சனசமூக நிலையம் கடந்த புதன் கிழமை புனரமைப்புச் செய்யப்பட்டு, முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜினால் திறந்து வைக்கப்பட்டது.

இச் சனசமூக நிலைய கட்டட புனரமைப்புக்கு யு.என்.எச்.சி.ஆர் 4 இலட்சத்து 50ஆயிரம் ரூபாவினையும் தளபாடக்கொள்வனவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் 50 ரூபாவினையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2000ஆம் ஆண்டு தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இச் சனசமூக நிலையம் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந் தமையும் தெரிந்ததே. (தி-16)

## சாரணர்தின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உலக சாரணர் தினத்தையொட்டி காங்கேசன் துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம் நடாத்தும் பேடன் பவல் தினப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 9.00 மணிக்கு யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ச)

## நூலக சேவைப் பயிற்சி

(சுதுமலை)

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் உள்ள நகர சபைகள், பிரதேச சபைகளில் உள்ள நூலகங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்களிற்கு நூலக சேவை தொடர்பான பயிற்சி ஒன்று கிழக்கு மாகாண வந்தாறு மூலைப் பல்கலைக் கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இரு வருட பாட நெறியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடககு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவிப் பணிப்பாளர் பொ.ஜெகதீஸ்வரன் சகல உள்ளூராட்சி மன்ற செயலாளர்களிற்கும் இது தொடர்பாக கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.அக் கடிதத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள நூலகங்களில் கடமை புரியும் நூலக சேவை சார் ஊழியர்களின் வினைத்திறமையை ஊக்குவிக்க இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல புதிய விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும்.

அத்துடன் வார இறுதி நாட்களில் நடாத்தப்படும் இப்பயிற்சி நெறியில் பொது நூலகங்களில் கடமை புரியும் உத்தியோகஸ்தர்களை பகுதி பகுதியாக அனுப்பிவைக்குமாறும் உள்ளூராட்சி மன்ற செயலர்களிற்கு அக்கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (தி-252)

# அனைவரிலும் அன்பு காட்டும் போது எம்மில் மனிதத்துவம் வளருகின்றது

ஒரு மாலை நேரம். சனக் கூட்டம் நிறைந்த அந்த வீதி



வழியே ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் பாரமான ஒரு சிறிய குழந்தை ஒன்றை கஷ்டத்தோடு தோளிலே போட்டு நடந்து வந்துகொண்டிருந்தான். பார்த்தவர்கள் எல்லோரும் அவன் மீது இரக்கப்பட்டார்கள். இவன் இந்தக் குழந்தையை கீழே போட்டுவிடப் போகிறான், கவனம் என்று எச்சரித்தார்கள். பாவம் இவனின் குடும்ப நிலை என்னவோ கஷ்டப்பட்டு இந்தக் குழந்தையை தூக்கிக்கொண்டு வருகிறானே என்று பேசிக் கொண்டனர். தானே போக வழியில்லை இவனுக்கேன் இந்த தேவையில்லாத வேலை என்றும் நகைத்துக் கொண்டனர்.

கூட்டத்தில் இருந்த ஒருவர் அனைவரின் முணுமுணுப்புக்களையும், முனகல்களையும், கேள்விகளையும் தமக்குள் கிரகித்துக்கொண்டு அந்தச் சிறுவனைப் பார்த்து, உனக்கு இந்தக் குழந்தை பாரமாக இல்லையா? இவனை ஏன் இப்படிக் கஷ்டப்பட்டு தூக்கிக்கொண்டு வருகிறாய்? நீயும் கஷ்டப்பட்டு இவனையும் கஷ்டப் படுத்துகிறாயே. உனக்கு இவன் பாரமாய் இல்லையா? என்று கேட்டார். அந்த ஏழு வயதுச் சிறுவனோ நின்று நிதானமாக அவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு தோளில் இருந்த அந்தக் குழந்தையைத் தூக்கி அவர்முன்னே காட்டி இவன் எனக்குப் பாரமாய் இல்லை, இவன் என் தம்பி. இவன் எப்படி எனக்குப் பாரமாக முடியும்? என்று கேட்டான்.

***முதன்மையான கட்டளை எது***

அனைத்திலும் முதன்மையான கட்டளை எது? என்று மறைநூல் அறிஞர் ஒருவன் யேசுவிடம் ஒரு தடவை ஒரு கேள்வியெழுப்பினான். அதற்கு யேசு இறைவனை உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் அன்பு செய்வாயாக என்பது முதல் கட்டளை. உன்மீது நீ அன்பு கூறுவதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்பது இரண்டாவது கட்டளை. இவற்றைவிட மேலான கட்டளை எதுவும் இல்லை என்றார். உன்னைப்போல் உன் அயலானை நேசி என்று யேசு கற்பிக்கிறார்.

அயலவருக்கு அன்பு செய்யுங்கள், அவர்களுக்கு உதவி செய்யுங்கள், அவர்களையும் மனிதர்களாக மதியுங்கள் என்றுதான் எல்லா மதங்களும் சொல்லுகின்றன. நமது அன்றாட வாழ்வு அனுபவத்தில் நமது சகோதரர்கள், நமது பெற்றோர், நமது உறவினர்கள், நமது நண்பர்கள் சில வேளைகளில் நமக்குப் பாரமாய்ப் போய் விடுவதுண்டு. அல்லது அவர்களை நாம் பாரங்களாக நினைப்பதுண்டு. ஒவ்வொரு மனிதனும் என் நண்பன் என்ற கொள்கையின்படி நாம் அனைவரையும் ஏற்கவும், அன்புசெய்யவும், அனுசரிக்கவும் தொடங்கும்போது நமது சகோதரர்கள் நமது பெற்றோர், நமது உறவினர்கள், நமது நண்பர்கள் எமக்குப் பாரமாகாமல் இருக்க வழியுண்டு.

***அயலவன் என்பவன் யார்***

ஒரு பிரசங்கம் நடந்துகொண்டிருந்தது. ஒரு குருவானவர் உன் அயலானை அன்புசெய் என்பது பற்றி காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தார். அயலவர்களும் உன்னைப்போன்றவர்களே, உனது உணர்வுகளும் மனிதத் தன்மைகளும், ஏக்கங்களும், எதிர்பார்புக்களும் அவர்களுக்கு இருக்கவே செய்யும் என்பதை உணரும்போது அவர்களை ஏற்று வாழும் வாழ்வு இலகுவானதாகும் என்று கூறி அயலவர்களை அன்புசெய்வது பற்றித் தெளிவாக விளக்கிக்கொண்டிருந்தார். எல்லோரும் அவரின் மறையுரையைத் தெளிவாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். தனது மறையுரையை இவ்வளவு தெளிவாகக் கேட்கிறார்கள். இந்த மறையுரையின் தாக்கம் இனி இவர்கள் வாழ்வில் தெரியப்போகிறது என்ற மன நிறைவோடும், மன மகிழ்வோடும் இவர் மறையுரையை முடித்துக்கொண்டார்.

மறையுரை முடித்து வெளியே வந்தபோது மக்கள் எல்லோரும் அவசர அவசரமாக வீடுகளுக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். ஒரு சிறுவன் மட்டும் இன்னொரு சிறுவனைக் குப்புறக் கிடத்தி முதுகிலே ஏறியிருந்து ஒரு கையால் அவன் தலைப் பகுதியை அழுத்திப் பிடித்துக் கொண்டு மற்றக் கையை இறுக்கமாகப் பொத்தி முதுகிலே அவனுக்கு இடித்துக் கொண்டிருந்தான். குருவானவருக்குப் பெரும் குழப்பமாய்ப் போய்விட்டது. அயலவர்களை அன்பு செய்வது பற்றி இவ்வளவு தெளிவாகச் சொன்ன பின்னரும்

## பரமபிதா காட்டிய பாதை

இவன் ஏன் இப்படிச் செய்கிறான் என்று தனக்குள் நினைத்துக் கொண்டு அவர்கள் இருவரையும் கூப்பிட்டார். அடித்துக்கொண்டிருந்தவனைப் பார்த்து நான் இவ்வளவு நேரமும் அயலவர்களை அன்பு செய்வது பற்றியல்லவா பேசிக் கொண்டிருந்தேன். நீ இதைக் கேட்கவில்லையா? என்று கேட்டார். அயலவர்களை அன்புசெய்வது பற்றி மிக அழகாகச் சொன்னீர்கள் நான் தெளிவாகக் கேட்டேன். ஆனால், இவன் என் அயலவன் அல்ல. இவன் என் சொந்தத் தம்பி என்று சொன்னான். என்னுடைய அயலவன் யார்? என்ற கேள்விக்கான பதிலை நாம் எமது வசதிக்கும் தேவைக்குமேற்றவாறு நேரத்திற்குநேரம் மாற்றிக்கொள்வதுண்டு.

***அனைவரிலும் அன்பு கொள்வோம்***

நாம் எப்போது எம் அயலவர்களைப் பற்றி சிந்திக்கிறோம்? நாம் எப்போது எமது அயல் வீட்டாரை எமக்கு அருகில் இருப்பவர்களை நினைத்துப் பார்க்கின்றோம்? என்ற கேள்விக்கு சுவாரசியமான ஒரு பதில் உண்டு. எனது அயலவனுக்கு தொற்றுநோய் ஏற்படும் போதுதான் அவனைப் பற்றி நினைக்கிறோம், அவனைப் பற்றி கவலைப்படுகிறோம் என்பதுவே அந்தப் பதிலாகும். அந்தவேளையில் அந்த அயலவனை நினைப்பது அவனுக்குப் பணிவிடை புரிய அல்ல. அவனின் தொற்றுநோய் எமக்கும் தொற்றிவிடாமல் இருக்க வேண்டும் என்று கவனம் கொள்வதற்கே ஆகும்.

என்னுடைய அயலவன் யார்? என்ற கேள்விக்கான பதிலை எம்முடைய வசதிக்கும் தேவைக்கும் நேரத்திற்கும் ஏற்றவிதமாக மாற்றிக் கொள்ளாமல் அயலவர்கள் அனைவருக்கும் எப்போதும் உதவி செய்ய வேண்டும் என்பதை விளக்குகின்ற ஓர் அருமையான பாடல் உண்டு.

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன். ஒவ்வொரு மனிதனும் சகோதரன். வறுமையில் வாழ்பவன் என் நண்பன். வருத்தத்தில் இருப்பவன் சகோதரன். அல்லல் படுபவன் என் நண்பன். ஆபத்தில் இருப்பவன் சகோதரன். காரணம் அவனும் மனிதன். பிறகுலம் சேர்ந்தாலும் என் நண்பன். பிற இனம்

**அருள்திரு நீபன் மரியாம்பிள்ளை**

சேர்ந்தாலும் சகோதரன். பிற மொழி பேசினாலும் என் நண்பன். பிறமதம் சார்ந்தாலும் சகோதரன். காரணம் அவனும் மனிதன். அழகை இழந்தவன் என் நண்பன். அறிவை இழந்தவன் சகோதரன். ஊனமாய் பிறந்தவன் என் நண்பன். ஊமையாய் பிறந்தவன் சகோதரன்.காரணம் அவனும் மனிதன்.

இப்பாடல் வரிகள் என்று எம் வாழ்வில் அர்த்தமும் ஆழமும் பெறுகின்றதோ அன்று எம் வாழ்வு அயலவர்களுக்காக வாழ்கின்ற ஒரு வாழ்வாக மாற முடியும். இனியும் என்னுடைய அயலவன் யார்? எனக்கு அடுத்தவன் யார்? என்று கேள்வி கேட்பதை விடுத்து அனைவரையும் அன்பு செய்யவும், அனைவர்க்கும் பணி புரியவும் அதன் வழி எமது மனிதத் தன்மையை மற்றவர்கள் முன் சாட சியப்படுத்தவும் முயல்வோம். □

# தேசிய ஜனநாயகக் கட்சி தேர்தலில் போட்டியிடாது

(கொழும்பு)

தேசிய ஜனநாயக்கட்சி எதிர் வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவது இல்லையெனத் தீர்மானித்துள்ளது.

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தேசிய ஜனநாயக் கட்சியின் முக்கியஸ்தர்களின் கூட்டம் அதன் பிரதித் தலைவர் பி.பெருமாள் தலைமையில் ஹற்றன் பணிமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியை எல்லா மாவட்டங்களிலும் ஆதரிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் ஐக்கியதேசிய முன்னணியில் எந்த எந்த வேட்பாளர் கஞகது ஆதரவு வழங்குவது என்பது குறித்து கட்சியின் நிர்வாக சபை கூடித் தீமானிக்கவுள்ளதாக கடசியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (தி-61)

## கல்விக் கண்காட்சி

(பாசையூர்)

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி மேம்பாட்டு நிலையம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும், போரூட் நிறுவனத்தினதும் அனுசரணையுடன் 20 நாள் வதிவிடப் பயிற்சியை முடித்த பிரதேச இணைப்பாளர்,வலய இணைப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்களுக்கு கல்விக் கண்காட்சி சுற்றுலா ஏற்பாடு ஒன்றைச் செய்துள்ளது.

இந் கண்காட்சி நேற்று சனிக்கிழமை தொடக்கும் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன் கிழமை வரை வன்னி, வவுனியா, திருகோணமலை, அனுராதபுரம், மன்னார் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது. (தி-72)

# குடாநாட்டு நிலைமைகளை சுவிஸ் எம்.பிக்கள் ஆராய்வு


(யாழ்ப்பாணம்)

சுவிஸ்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேர் அடங்கிய குழுவொன்று நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் வந்தது.

இக்குழு நல்லூரில் அமைந்துள்ள சுவிஸ் நாட்டு அபிவிருத்தி நிறுவனத்தைச் சென்று பார்வையிடடதுடன், கொக்குவிலில் உள்ள காந்திஜி கிராமத்தில் வாழும் பெண்களின் அவலநிலை குறித்தும் ஆராய்ந்தனர்.

பின்னர் மாலை 4.15 மணியளவில் யாழ். செயலகத்திற்குச் சென்று உதவி அரச அதிபர் திருமதி திலகநாயகம் போல் தலைமயிலான குழுவினரைச் சந்தித்து யாழ்.மாவட்ட அபிவிருத்தி குறித்து கலந்துரையாடினர்.

பின்னர் கியூடெக் நிறுவனத்திற்குச் சென்று கலந்துரையாடியபின் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியுள்ளனர். (ச-19,43)






நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த சுவிஸ் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ். ஆயர் இல்லத்திலும், கியூடெக் நிறுவனத்திலும் சந்திப்புக்களை நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:ஐங்கரன்)

# காரைநகர் பல நோக்கு
# புதிய கட்டடத் திறப்புவி

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



அன்புசால் பெருந்தகையீர்,

காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இன்று தனது தலைமைப் பணிமனையினை பெருமகிழ்வோடு திறந்து வைப்பதனையிட்டுப் பேருவகையடைகின்றோம்.

பல நோக்கங்களை அடைவதற்காக பலர் கூடி உழைத்தல் கூட்டுறவாகும். இவ்வகையில் சாதாரண மக்களின் அன்றாடத் தேவைகளினைப் பூர்த்தி செய்யவும், உறுப்பினர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் என ஆரம்பிக்கப்படுகின்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் காரைநகர்ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் பழமையானது. பல நெருக்கடிகளையும் யுத்த வடுக்களையும் சந்தித்து இன்று புதுப்பொலிவு பெறுவது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஒருவருக்காகப் பலரும் பலருக்காக ஒருவரும் தம் தேவைகளைப் பூர்த்தியாக்கக் கூடிய வகையில் ஒன்றிணைந்து செயற்படுதல் கூட்டுறவின் முக்கிய கொள்கையாகும். கூட்டுறவே நாட்டுயர்வு என்பார்கள். எனவே, இவ்வாறான கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி நாட்டுக்குப் பெரிதும் அவசியமானதாகும்.

இவ்வகையில் இக்கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களையும் தலைவர், பணிப்பாளர், பணியாளர்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. இப்பணிமனை உருவாக்கத்திற்குத் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றிய அனைவருக்கும் இறையருள் கிடைக்கவும் இக்கூட்டுறவுச் சங்கத்தின் பணி மேன்மேலும் சிறப்புற வளரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
**நல்லை ஆதீன முதல்வர்.**

*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,*
*நல்லூர்.*

## ஆரோக்கியமான செயற்பாடு



1971ஆம் ஆண்டு இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் கட்டமைப்பில் புனரமைப்பு ஒன்று செய்யப்பட்டது. இப்புனரமைப்பின் கீழ் பல சிறிய கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு பல கிளைகளைக் கொண்ட பெரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இப்புனரமைப்புக்கு முன்னர் காரைநகர்ப் பிரதேசத்தில் இயங்கிவந்த சிறிய ப.நோ.கூ. சங்கங்கள் பல தமது சொந்தக் கட்டடங்களில் இருந்துகொண்டு செயற்பட்டு வந்தன.

ப.நோ.கூ.சங்கங்களின் செயல்திறனை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இவ்வாறு பெரிய அளவிலான ப.நோ.கூ. சங்கங்கள் அமைக்கப்பட்டபோதும், புதிதாக அமைக்கப்பட்ட பெரிய ப.நோ.கூ.சங்கங்களுக்கு அவை தமது தலைமை அலுவலகங்களை அமைத்துக்கொள்ள பொருத்தமான கட்டட வசதிகள் இல்லாதிருந்தமை ஒரு பெரிய குறைபாடாக இருந்தது.

இதனால் இவ்வாறான சங்கங்கள் வசதிகுறைந்த வாடகைக் கட்டடங்களில் செயற்படவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. இதனால் இச்சங்கங்கள் முழு அளவிலான தமது செயல்திறனைப் பிரயோகிக்கக்கூட முடியாமல் இருந்தது. இந்நிலைமை காரைநகர் ப.நோ.கூ.சங்கத்திற்கும் இருந்தது. நேற்றுவரை அது தனது தலைமை அலுவலகத்தை வாடகைக் கட்டடம் ஒன்றிலேயே அமைத்து செயற்பட்டு வந்தது. தனி ஒரு மனிதனின் ஆரோக்கியமான செயற்பாடுகளுக்கு அவனது தேக ஆரோக்கியம் எவ்வாறு உந்துசக்தியாக இருக்குமோ அதுபோல ப.நோ.கூ. சங்கம் ஒன்றின் இயலுமையைக் கட்டியெழுப்புவதற்கும், பொருத்தமான வசதிகளுடன் கூடிய தலைமைச் செயலகம் ஒன்று இருத்தல் அவசியமானது.


இந்தவகையில், காரைநகர் ப.நோ.கூ. சங்கம் தனக்கென வசதிகளுடன் கூடிய ஒரு தலைமை அலுவலகத்தை அமைத்துக்கொண்டு அதிலிருந்து தனது பணிகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்தது. இன்று அக் கட்டடத்தின் திறப்புவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்நாள் இச்சங்க வரலாற்றில் ஒரு பொன்நாளாகும்.

இப்புதிய சொந்தத் தலைமை அலுவலகத்தில் இருந்து செயற்பட்டு இப்பிரதேச மக்களுக்கு திருப்திகரமான சேவையை ஆற்ற சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எல்லாம்வல்ல இறைவன் அருள்புரியவேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

**செ.கனகசபாபதி**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.**

*கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*

## முன்னுதாரணமாக விளங்கவேண்டும்



காரைநகர்ப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டடம் இன்று திறக்கப்படுவதனையிட்டு மிக்கமகிழ்வடைகின்றேன். மிகவும் பிரமாண்டமான தோற்றத்துடன் புதுப்பொலிவுபெற்று மிளிருகின்றது.

கடந்த சில வருடங்களாக இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நட்டத்துடன் இயங்கிவருகின்றமை மிகவும் மனவேதனைக்குரியது. இந்நிலையிலும் தமக்கெனப் புதிய கட்டடம் அமைத்து இன்று திறப்புவிழா நடாத்தப்படுவது மிகவும் பாராட்டுக்குரியது. இக்கட்டடத்திற்காக என்னால் கூட்டுறவு அமைச்சின் மூலமாக ஐம்பது இலட்சம்ரூபா வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒரு புதிய லொறி ஒன்றும் ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையத்தினால் கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வளவு காலமும் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவந்த குறை பூரணமாக நீக்கப்பட்டுள்ளது.

இதனை உரியவாறு பயன்படுத்தி மக்களிற்குப் பல சேவைகளை வழங்குவதோடு சங்கமும் இலாப மீட்ட முயற்சிசெய்ய வேண்டும்.

இங்கு பணியாற்றும் ஊழியர்களும் தியாக மனப்பாங்குடன் கடமை புரியவேண்டும். அத்துடன், ஊழியர்களின் நலன்களிலும் இச்சங்கம் அக்கறை கொள்ளவேண்டும். நிர்வாகசபையின் திறமையான செயற்பாட்டின் மூலம் இப்பிரதேசத்தின் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து இதன் ஊடாகப் பல்வேறு சேவைகள் மக்களைச் சென்றடையக்கூடிய வகையில் காரைநகர் ப.நோ.கூ. சங்கத்தின் பணி தொடர்ந்து ஏனைய ப.நோ.கூ. சங்கங்களிற்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டும் எனக்கூறி இக் கட்டட நிறைவுக்குப் பலவகையிலும் உதவிய அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து ஈழத்துச் சிதம்பர சுந்தரேஸ்வரப் பெருமானை வணங்கி அமைகின்றேன்.

**தி.மகேஸ்வரன்**
**முன்னாள் இந்துகலாசார அமைச்சர்**

## பல்வளமும் பெற்றுப் பல்

நீண்ட காலமாகத் தீவுப்பகுதி ஐக்கிய பண்டகசால
1971இல் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி
அவர்களால் காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என
செய்து புனரமைக்கப்பட்ட மேற்படி சங்கமானது இதுகால
இயங்கிவருவதுடன் தனக்கென நிரந்தரமான ஒரு தலைமைப்
இந்து கலாசார அமைச்சின் துணையுடன் நிறுவியுள்ளமை பா

இப்பணிமனையானது காரைநகர்வாழ் மக்களு
துறைகளில் சிறந்த சேவையாற்றும் என்பதில் ஐயமில்லை. கா
மீளக்குடியமரவும் இப்பணிமனை ஒரு ஊன்றுகோலாக அமை
மீளவும் புதுப்பொலிவும், புத்துணர்வும், புத்தெழுச்சியும் பெற்
அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சொந்தமண்ணில் மீளக்குடி


'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்' போல வேறெது
மீளக்குடியமரலின் முதற்படியாக ப.நோ.கூ. சங்கத் தலை
இனி மக்களும் தலைநிமிர வேண்டியது தானே. காரைநகர் ப.
அதனை நிரந்தரக் கட்டடத்தில் உயர்த்[illegible]திரும்பி[illegible]ரும், உ
பல்லாண்டு காலம் நீடூழி வாழ்ந்து, வளம்பல பெற்றுப் பு
பரம்பொருள் அருள்புரிவாராக.

*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

மலர் அமைப்பு:-
வலம்புரிச் செய்தியாளர்
ப.ஐங்கரன்



## காலத்தின் பணியொன்றின் நிறைவுநாள்



எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் புதுக்கட்டடத் திறப்புவிழா இன்று நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

காரைநகர் ப.நோ.கூ. சங்கம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இதற்கென தனியான சொந்தக் கட்டடம் அமைக்கப்படவேண்டும் எனப் பலரும் முயற்சியெடுத்து வந்தனர். ஆனாலும் எவராலும் செயற்படுத்த முடியாமல் போய்விட்டது. இதனால் பல்லாண்டு காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கிவந்தது.

எமது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்த காலத்தில் மிகவும் இலாபகரமாக மக்களுக்குச் சேவையாற்றி வந்தது. கடந்தகாலங்களில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த ஒரு சகாப்தகாலம் நாம் கடந்துவந்த பாதைகளும் முட்களும் நிறைந்ததாகவே அமைந்திருந்தது.

நாம் மீளக்குடியமர்ந்தபோது எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிர்வாகம் உட்பட அனைத்தும் சின்னாபின்னமாகிய நிலையிலேயே மீளக்குடியமர்ந்தோம். எமது சொத்துக்கள் அழிவுற்றிருந்தன. இந்நிலையில், காரைநகர் மைந்தன் கௌரவ தி.மகேஸ்வரன் இந்துகலாசார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் கூட்டுறவு அமைச்சர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். அப்துல்காதர் அவர்களுடன் தொடர்புகொண்டு எமது சங்கம் நிலையான கட்டடம் அமைப்பதற்கு 5மில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுத்தந்தார். இதன் பயனாகவே இன்று எமக்கென ஒரு சொந்தக் கட்டடம் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

இப்பாரிய கட்டடப் பணியை மேற்கொள்வதற்கு உதவிய எமது கௌரவ அமைச்சர் தி.மகேஸ்வரனைப் பாராட்டி வாழ்த்துவதுடன், கூட்டுறவு அமைச்சர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். அப்துல்காதருக்கும் எமது நன்றி கலந்த பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கட்டடப் பணிக்குத் தோளோடு தோள்நின்று உதவிய எமது சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள், எமது சங்கப் பணியாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் கட்டட வேலைகளைப் புனரமைக்க உதவிய தொழிலாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நாம் காலத்தின் முக்கிய பணியொன்றினை நிறைவுசெய்துள்ளோம். இதனால் எமது சங்க நிர்வாகம் மட்டுமல்ல காரைநகர் மக்கள் அனைவருமே பெருமைகொண்டுள்ளனர். ஆதலால் அனைவரும் ஒன்றிணைந்து எமது பணிதொடர எல்லாம்வல்ல பரம்பொருளை வணங்குவோமாக.

*ப.நோ.கூ. சங்கம், காரைநகர்.* **அ.சிற்றம்பலம், தலைவர்.**

## அனைவ

ஒவ்வொரு நாட
கூட்டுறவு நிறுவனங்களு
வாக்கை தனது தாரக ம
சமத்துவம், சகோதரத்துவ
செய்வதை நோக்காகக்

அத்தகைய
கூட்டுறவுச் சங்கத்தில்
மட்டுமன்றி எனது கடமை
அமைத்துத் திறப்புவிழாக்
செய்தி அனுப்புவதையிட்

1999ஆம் ஆ
ஏற்பதற்கு முன்னரே நி
யுத்தசூழ்நிலையால் அம்
நிலையான கட்டடம் அ
அ[illegible]னைத் [illegible]டர்ந்து
[illegible]வ தி[illegible].மகேஸ்வ
செயற்திறன் அபிவிருத்தி
பணிமனை இன்று புதுப்

கடந்தகாலங்க
பாதையில் காலடி பதிக்
பல்துறைசார்ந்த சேவைக

அந்த இலக்
பணியாளர்கள், காரைநக

*ப.நோ.கூ. சங்கம்,*
*காரைநகர்..*

# நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின்
# டுவிழா சிறப்புமலர் - 15.02.2004

## பெற்றுப் பல்லாண்டு வாழ்க!




வுப்பகுதி ஐக்கிய பண்டகசாலையாக இருந்து மன்ற உறுப்பினர் கலாநிதி ஆ.தியாகராஜா க்குக் கூட்டுறவுச் சங்கம் எனப் பெயர்மாற்றம் மற்படி சங்கமானது இதுகாலவரை சிறப்புற நிரந்தரமான ஒரு தலைமைப் பணிமனையை ணையுடன் நிறுவியுள்ளமை பாராட்டுக்குரியது. து காரைநகர்வாழ் மக்களுக்கு பல்வேறு றும் என்பதில் ஐயமில்லை. காரைநகர் மக்கள் ன ஒரு ஊன்றுகோலாக அமையும். காரைநகர் ணர்வும், புத்தெழுச்சியும் பெறவேண்டுமானால் கள் சொந்தமண்ணில் மீளக்குடியமர வேண்டும். பொன்னாடும்' போல வேறெதுவும் அமையாது. ாக ப.நோ.கூ. சங்கத் தலைமைப் பணிமனை தலைநிமிர்ந்துவிட்டது. ண்டியது தானே. காரைநகர் ப.நோ.கூ. சங்கத் தலைமைப் பணியகமும், ் உயர்த் [illegible] ரும்பி [illegible] ரும், உறுப்பினர்களும், மக்களும், அக்கட்டமும் ழ்ந்து, வளம்பல பெற்றுப் புதுப்பொலிவுடன் திகழ எல்லாம் வல்ல

**பத்தினியம்மா திலகநாயகம்போல்**
மேலதிக அரச அதிபர்




## காரைநகர்வாழ் மக்களின் நீண்டகாலக் கனவு நனவாகின்றது



காரைநகர்ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமானது யாழ். மாவட்டத்தில் உள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுள் முதல்தரமான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக 1970 இல் இருந்து 1990ஆம் ஆண்டுவரை இலாபத்துடன் சிறந்த சேவையினை மக்களுக்கு ஆற்றி வந்ததைக் காரைநகர்வாழ் மக்களும், கூட்டுறவுச் சமூகமும் நன்கு அறியும்.

இருந்தும் கடந்தகாலங்களில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்ச்சூழல்கள் காரணமாக யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாரிய நிதி நெருக்கடியினை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றன. இதற்குக் காரைநகர்க் கூட்டுறவுச் சங்கமும் விதிவிலக்கல்ல.

இருந்தும் 1970களில் இருந்து காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அலுவலகக் கட்டடத் தொகுதியும், களஞ்சியமும் கட்டுவதற்குக் கடந்த காலங்களில் காரைநகரைப் பிரதிநிதிப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பலமுறை முயற்சியெடுத்தும் கைகூடவில்லை என்பதைக் காரைநகர் வாழ் மக்கள் அறிவார்கள்.

கௌரவ இந்து சமய விவகார அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனின் அயராத முயற்சியினால் காரைநகர்ப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பல லட்சம் ரூபா பெறுமதியான கூட்டுறவுச் சங்கக் கட்டடத் தொகுதி கடந்த ஆண்டு சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று கௌரவ அமைச்சரினால் அத்திபாரம் இடப்பட்டு இன்று கௌரவ அமைச்சர் அவர்களினால் வைபவ ரீதியாகத் திறந்துவைப்பதையிட்டு காரைநகர்வாழ் மக்களும் கூட்டுறவுச் சமூகமும் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

எனவே எதிர்காலத்தில் காரைநகர்ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவைகள் காரைநகருக்கு மட்டுமல்லாது, நாடளாவிய ரீதியில் சிறந்த சேவையாற்றி எதிர்கால சந்ததியினருக்கு வேலைவாய்ப்புக்களையும் வழங்க வேண்டும் என எல்லாம்வல்ல சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

'கூட்டுறவே நாட்டுயர்வு'

**வே.சாம்பசிவம்**
**உதவி அரசாங்க அதிபர்**

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்.*

## மன நிறைவான செயல்



காரைநகர் ப.நோ.கூ. சங்கத்தின் தலைமைப் பணிமனைத் திறப்புவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


இதுவரை காலமும் வாடகைக் கட்டத்தில் இயங்கிவந்த காரைநகர் ப.நோ.கூ. சங்கத் தலைமைச் செயலகம் இன்று 65 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் அமைத்து திறப்புவிழாக் காண்பது மனநிறைவைத் தருகின்றது.

காரைநகர்ப் பிரதேசம் யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்று. மக்கள் மீளக்குடியேற்றமும் குறைவு. இருந்தபோதும் அண்மைக்காலமாக அதன் வளர்ச்சி மிகவும் போற்றுதற்குரியதாக அமைகின்றது. தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாற்றமடைந்ததின் பின்பு பல திணைக்கள அலுவலகங்கள் உருவாக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஏற்கனவே செயல்பட்ட திணைக்களங்கள், அமைப்புக்கள் புதுப்பொலிவு பெற்று வருகின்றன. இந்த வகையில் யுத்தகாலத்திலும்சரி, அதற்கு முன்பும் சரி காரைநகர் மக்களுக்கு அளப்பரிய சேவை செய்து வருகின்ற ப.நோ.கூ.சங்கமும் புதுப்பொலிவு பெறுவதானது இந்து கலாசார அமைச்சர் கௌரவ தியாகராஜா மகேஸ்வரன் அவர்களின் கைங்கரியம் என்பது யாவரும் அறிந்ததே. அவருக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பணியைச் சிறப்புறச் செய்து முடித்த தலைவர் உயர்திரு. ஆ.சிற்றம்பலம் மற்றும் பணிப்பாளர்கள் கூட்டுறவுப் பணியாளர்கள் அனைவருக்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஜே.எக்ஸ்.செல்வநாயகம்**
**உதவி அரசாங்க அதிபர்.**
*உதவி அரசாங்க அதிபர் பணிமனை,*
*ஊர்காவற்றுறை.*

## சங்க வரலாற்றில் பொன்னான நாள்



எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகக் கட்டடத் திறப்புவிழா இன்று நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்வடைகினறோம். சங்கம் உருவாக்கப்பட்டு நீண்டகாலமாக இருந்தும் இன்றுவரை எமக்கென ஒரு சொந்தக் கட்டடம் இல்லை என்ற குறை இன்றுடன் நீங்கியுள்ளது. கடந்த பல வருடங்களாக நாட்டின் அசாதாரணச் சூழ்நிலைகளால் எமது பணியாளர்கள் இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்தனர். இந்நிலையில், எமது சங்கமும் நட்டத்தில் இயங்க ஆரம்பித்தது. ஆனாலும் இயக்குநர் சபையுடன் எமது பணியாளர்கள் தோளோடு தோள்நின்று பணியாற்றி காலச்சக்கரத்தை ஓட்டிவந்தனர்.

1996ஆம் ஆண்டு நாம் மீளக்குடியமர்ந்த பின்னர் ஒருவாறு தலைநிமிரக்கூடிய நிலைமை தோன்றக கூடியதாக உள்ளது. ஆனாலும், கடந்தகால யுத்தநிலைமையினால் ஏற்பட்ட சொத்திழப்பானது பேரிழப்பாக இருந்தமையினால் இலாபமீட்டும் வீதம் குறைவாக உள்ளதை யாவரும் அறிவர்.

கடந்த வருடத்தின் இந்து கலாசார அமைச்சர் கௌரவ தி.மகேஸ்வரனின் முயற்சியினால் கூட்டுறவு அமைச்சின் மூலம் ஐந்து மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் எமது தலைமைப் பணிமனை நிறுவப்பட்டுள்ளது. இதற்கென 14.04.2003 ஆம்ஆண்டு அன்று அமைச்சர் தி.மகேஸ்வரனால் அடிக்கல் நாட்டப்பட்டது. சுமார் 10 மாதகாலப் பகுதிக்குள் முழுமைபெற்ற ஒரு தலைமையகக் கட்டடமாக மிளிர்கின்றது.

புதிய கட்டடத்தில் பணியாற்றும் பணியாளர்களாகிய நாம் புது உத்வேகத்துடன் செயற்பட இஃது வாய்ப்பளிக்கும். பணியாளர்களின் தியாகத்தினாலும், சிந்தும் வேர்வையினாலுமே எமது சங்கம் இலாபமீட்ட முடியும். இலாபமீட்டும்போதே பணியாளர்களும் கூடிய நன்மைபெற முடியும்.

இப்புதிய கட்டடத்தில் எமது தலைமையகம், கிராமிய வங்கி, நுகர்ச்சிச் சில்லறை-மொத்தவிற்பனை நிலைய கிளை இலக்கம் 5 மற்றும் களஞ்சிய அறை என்பன ஒன்றாக அமைந்துள்ளமை நிர்வாகச் செயற்பாட்டிற்கு நன்மைஅளிப்பதாக அமையும். இதுபோல் ஏனைய கிளைக்கட்டடங்களும் சொந்தமாக்கப்பட்டு புதிதாக்கப்பட வாய்ப்பு ஏற்படவேண்டும்.

இவ்வாறு பல புதுமைகளினூடாகப் பணியாளர்களின் உள்ளங்கள் பூரிப்படையும். இதனூடாகப் பணியாளர்கள் தமது தியாக செயற்பாடுகளை வழங்கி ப.நோ.கூ.ச. முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிந்து பொதுமக்களுக்கு நல்ல சேவைகளை வழங்கப் பிரார்த்திக்கின்றேன்.

இன்றைய விழா நிகழ உதவிய எமது இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸவரன் மற்றும் கூட்டுறவு அமைச்சர் அல்ஹாச் ஏ.ஆர்.எம். அப்துல்காதர் அவர்களுக்கும் எமது பணியாளர் சார்பாக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இக்கட்டடத்திற்குப் பல வகையிலும் உதவிய அனைவருக்கும் எமது பணியாளர்கள் சார்பாக எமது நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். 'கூட்டுறவே நாட்டுயர்வு'

*ப.நோ.கூ. சங்கம், காரைநகர்.* **க.சோமசுந்தரம், பணியாளர்.**

## அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்



ஒவ்வொரு நாட்டினதும் சமூக பொருளாதார விருத்திக்குப் பங்காற்றும் நிறுவனங்களில் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தனியிடம் உண்டு. 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற சான்றோர் வாக்கை தனது தாரக மந்திரமாகக் கொண்டு மக்களின் பொருளாதாரம், கல்வி, கலாசாரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற மனித வரலாற்றின் அடிப்படை விழுமியங்களை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு செயற்படுபவையே கூட்டுறவு நிறுவனங்கள்.

அத்தகைய சிறப்புமிக்க கூட்டுறவு நிறுவனமாகிய காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு முகாமையாளராகக் கடமையாற்றுகின்ற வாய்ப்புக் கிடைத்தது மட்டுமன்றி எனது கடமைக் காலத்தில் இந்த நிறுவனம் தனக்கென ஒரு நிலையான கட்டடத்தை அமைத்துத் திறப்புவிழாக் காணும் இப்பொன்னான நன்நாளில் திறப்புவிழா சிறப்புமலருக்கு செய்தி அனுப்புவதையிட்டுப் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

1999ஆம் ஆண்டு இச்சங்கத்தில் பொது முகாமையாளராகக் கடமைப்பொறுப்பை ஏற்பதற்கு முன்னரே நிலையான கட்டடம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நாட்டின் யுத்தசூழ்நிலையால் அம்முயற்சி கைகூடவில்லை. 2001ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது சங்கத்தின் பொதுச்சபையால் நிலையான கட்டடம் அமைப்பதற்கான பிரேரணைகள் முன்மொழியப்பட்டு, சபை அங்கத்தவர்களால் தீர்மானம் எடுக்கப்பட்டது. அற[illegible]னத் [illegible]டர்ந்து தற்போதைய இயக்குநர்சபை அதற்கான முயற்சியை மேற்கொண்டு இந்து கலாசார அமைச்சர் [illegible]ரவ திருதி.மகேஸ்வரன் அவர்களது நன் முயற்சியின் பயனாக 2003ஆம் ஆண்டு கூட்டுறவு அமைச்சிடம் இருந்து செயற்திறன் அபிவிருத்தி நிதி என ரூபா 5மில்லியன் கிடைத்தது. அந்தக் கடன்நிதி உதவியைக்கொண்டு எமது தலைமைப் பணிமனை இன்று புதுப் பொலிவுடன் வானுயர எழுந்து நிற்கின்றது.

கடந்தகாலங்களில் பல சவால்களை எதிர்கொண்டு வளர்ச்சியும், எழுச்சியும் பெற்று புதியதோர் வரலாற்றுப் பாதையில் காலடி பதிக்கும் இந்நன்னாளில் எமது சங்கம் தொடர்ந்துவரும் காலங்களில் காரைநகர்வாழ் மக்களுக்கு பல்துறைசார்ந்த சேவைகளைச் செய்யவேண்டும் என்பது எனது விருப்பம்.

அந்த இலக்கை அடைவதற்காக எமது சங்கத்தின் தலைவர், இயக்குநர்சபை, பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், காரைநகர்வாழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக.

*ப.நோ.கூ.சங்கம்,*
*காரைநகர்..*

**க.நவநீதன்**
**பொது முகாமையாளர்.**

# நான் ஓர் இந்தியப் பிரஜை

# சென்னையில் சோனியா அறிவிப்பு

(சென்னை)

எல்லா இந்தியப் பிரஜைகளைப் போல நானும் ஒரு இந்தியப் பிரஜை. நான் ஒரு இந்தியப் பிரஜை என்ற உணர்வை என் நெஞ்சிலிருந்து எவராலும் நீக்கமுடியாது என்று காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி சென்னையில் தெரிவித்தார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியை சென்னை அண்ணா அறிவாலயத்தில் சோனியாகாந்தி சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சோனியாகாந்தியை பூக்கொத்து கொடுத்து கருணாநிதி வரவேற்றார்.

சோனியாகாந்திக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் கருணாநிதி தேநீர்விருந்தளித்துக் கௌரவித்தார்.



காங்கிரஸ் தலைவர்கள் பிரணாப் முகர்ஷி, கமல்நாத், தல்ஜிக்ஷிங் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜீ.கே.வாசன், முன்னாள் காங்கிரஸ் தலைவர்கள் இளங்கோவன், திண்டிவனம் ராமமூர்த்தி உடபட 30 இற்கும் மேற்பட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. சார்பில் அன்பழகன், ஆர்க்காடு வீராசாமி, மு.க.ஸ்ராலின, டி.ஆர்.பாலு, துரைமுருகன, நடிகர் சரத்குமார், பொன்முடி, பரிதிஇளம் வழுதி, வீரபாண்டி ஆறுமுகம் உட்படப பலர் கலந்துகொண்டார்கள்.

கருணாநிதியுடன் முக்கால் மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியபின் சோனியாகாந்தி செய்தியாளர்களிடம் பேசினார்.

டில்லியில் தயாநிதி மு.க.ஸ்ராலின், டி.ஆர்.பாலு ஆகியோர் என்னைச் சந்தித்தபோது தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்திக்க விரைவில் சென்னை வருவேன் என்றூ கூறியதற்கிணங்க இன்று இங்கு வந்திருக்கிறேன்.

கருணாநிதியுடனான பேச்சு வார்த்தைகள் சுமுகமாக அமைந்தது. பா.ஜ.கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியை தோற்கடிப்பதற்கான பிரசாரத்தை எப்போது தொடங்குவது, சேர்ந்து பணியாற்றுவது எப்படியென்பது பற்றி விவாதித்தோம் என்று அவர் தெரிவித்தார்.



அ.தி.மு.கவுடன் பாரதீஜ ஜனதாக்கட்சி சேர்ந்து அமைத்த கூட்டணிக்கும், தி.மு.கவுடன் காங்கிரஸ் கட்சி சேர்ந்து அமைத்துள்ள கூட்டணிக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று செய்தியாளர்கள் அவரைக் கேட்டதற்கு தி.மு.க. தலைமையில் தமிழகத்தில் அமைந்துள்ள கூட்டணி மிகவும் வலிமையான வெற்றிபெறக்கூடிய கூட்டணி என்றார்.

அயல்நாட்டில் பிறந்த நீங்கள் பிரதமராகக் கூடாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறி வருகிறாரே என்று கேட்டதற்கு நான் ஓர் இந்தியப் பெண்; இந்தியாவில் வாழும் எந்தவொரு குடிமகனையும் போல நானும் ஓர் இந்தியன் என்றார்.

அதி.மு.க. தலைவியோ பிற தலைவர்களோ என்னை விமர்சிப்பதைப் பற்றி நான் பொருட்படுத்தப்போவதில்லை. நான் ஓர் இந்தியன் என்பதே என் இதயத் துடிப்பு. என் இதயத்தில் இருந்த இந்த உணர்வை யாராலும் அகற்ற முடியாது. இதயபூர்வமாக நான் ஓர் இந்தியப் பிரஜை என்றார் சோனியாகாந்தி.

ஜெயலலிதாவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அ.தி.மு.க. தலைவி என்று சொன்னதோடு நிறுத்திக் கொண்ட அவர் ஜெயலலிதாவின் பெயரை ஓரிடத்திலும் குறிப்பிடவில்லை.

கருணாநிதியைச் சந்திக்க வந்ததன் மூலம் ராஜீவ் கொலைச் சதியில் ஜெயின விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை அடிபபடையில் தி.மு.க. மீது காங்கிரஸ் சுமத்திவந்த களங்கம நீக்கப்பட்டுவிட்டதா எனச் செய்தியாளர்கள் கேட்டதற்கு_ஜெயின் அறிக்கைபற்றி சில தவறான புரிந்துணர்வுகள் இருந்தன. இடைக்கால அறிக்கையில் சில கருத்துக்களை ஜெயின் விசாரணைக்குழு கூறியிருந்தது. ஆனால், இறுதி அறிக்கையில் தி. மு.கவுக்கு எதிராக எவ்வித கருத்தும் சொல்லப்படவில்லை. இறுதி அறிக்கை வெளியான பிறகு இடைக்கால அறிக்கை பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை என்றார் சோனியா.

தமிழ் மக்கள் என் அன்புக்குரியவர்கள் எனது மாமியாரும் கணவரும் தமிழ் மக்களை மிகவும் நேசித்தார்கள். நானும் தமிழக மக்கள் மீது மிகவும் அன்பு செலுத்தி வருகின்றேன். வரும் மக்களவைத தேர்தலில் திமுக - காங்கிரஸ கூட்டணிக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

நாகர்கோவில், ஸ்ரீபெரும்புதூர் தொகுதிகளை ஒதுக்குமாறு காங்கிரஸ் கோருமா எனக் கேட்டதற்கு அது மிகவும் சின்னப்பிரச்சினை. கட்சியின் பொதுச்செயலாளர் அது பற்றிப் பேசுவார் என்றார். (து)

## இந்தியச் செய்திகள்

## கருணாநிதி கைது பற்றிய வீடியோ கஸட்

## கலாநிதி மாறனுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி 2001 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட வீடியோ கஸட் தொடர்பான வழக்கில் 'சன்' ரி.வியின் உரிமையாளர் கலாநிதி மாறனுக்கு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

நீதிபதிகள் சந்தோஷ் ரெட்டி, வி.பி.சிங் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

கருணாநிதி கைதான போது எடுக்கப்பட்ட வீடியோக் கஸட்டுகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு தமிழ் நாடு காவல்துறை கலாநிதி மாறனுக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தது. இந்த நோட்டீஸை எதிர்த்துக் கலாநிதி மாறன் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் சென்னை உயர் நீதிமன்றம் அதை ரத்து செய்த்து.

இதை எதிர்த்துத் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தது. இதன் அடிப்படையிலேயே உச்ச நீதிமன்றம் கலாநிதி மாறனுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது. (து)

## மக்களவையைக் கலைக்கக் குடியரசுத் தலைவர்

## வெளியிட்ட பிரகடனம் சரியானதே

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

13ஆவது மக்களவையைக் கலைத்து புதியதேர்தல் நடத்த குடியரசுத்தலைவர் வெளியிட்ட பிரகடனத்தை எதிர்த்து தாக்கல் செய்யபபட்ட பொதுமக்கள் மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மக்களவையைக் கலைக்குமாறு குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்வது பிரதமரின் தனியுரிமை; இதுவே தொடர்ந்து அரசியல் சட்ட நடைமுறையாகவும் இருந்து வந்துள்ளது என்ற உசச நீதிமன்றம் தெளிவுபடக் கூறியுள்ளது.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி வி.என். கரே நீதிபதிகள் பிரிஜேஷ்குமார், எஸ். என்.கபாடியா ஆகியவர்களைக் கொண்ட நீதிபதிகள் குழுமக்களவையைக் கலைகருமாறு குடியரசுத் தலைவர் பிறப்பித்த பிரகடனத்துக்கு எதிராக வழக்குப்போட முடியாது என்று தெரிவித்தது. (து)

## மக்களவைத் தேர்தலில் அதிகார துஷ்பிரயோகம்

## தடுக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு மனு

(கோவை)

மத்திய-மாநில அரசுகள் அதிகார துஷ்பிரயோகம் செய்யாமல் மக்களவைத் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யத் தமிழ் நாட்டின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டுமெனத் தேர்தல் ஆணையத்தை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலர் வரதராஜன் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூட்டணியில் தமது கட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் தமது கட்சி போட்டியிடும் என்றும் இதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்றும் கூறினார்.

நாகர் கோவில் தொகுதியைக் காங்கிரசுக்கு விட்டுக் கொடுக்குமாறு நிர்ப்பந்தமுள்ளதா என்று கேட்டதற்கே வரதராஜன் இவ்வாறு கூறினார். (து)

## மாமியார் வழியில் மருமகள்

## சோனியாவுக்கு கருணாநிதி பாராட்டு

(சென்னை)

முதன்முறையாக தி.மு.க. அலுவலகமான அண்ணா அறிவாலயத்திற்கு காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி விஜயம் செய்தது பற்றிக் கேட்டதற்கு மாமியாரைப் பின்பற்றினார் மருமகள் என்றார் கருணாநிதி.

சோனியாகாந்தியுடனான சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் இது நல்ல சந்திப்பு; நாணயமான சந்திப்பு; நாட்டுக்குத் தேவையான சந்திப்பு எனக் கூறினார்.

தி.மு.கவுடன் காங்கிரஸுக்கு நல்ல உறவு இருந்ததில்லை என்று கடந்தகாலங்களில் சொல்லியிருக்கிறேன். காலங்கள் மாறும் அது போலவே அரசியல் நிலைகளும் மாறும் அதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு என்றார்.

சோனியாகாந்தி அந்நியர் என்ற அநாகரிகமான பிரச்சினையை ஒருபோதும் தி.மு.க. எழுப்பியதில்லை. சோனியாகாந்தியைப் பிரதமராக தி.மு.க. ஏற்றுக்கொள்ளும் கூட்டணிக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் என்று அவர் மேலும தெரிவித்தார். (து)

## குடியரசுத் தலைவருக்கு வாரண்ட்?

(புதுடில்லி)

குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் மற்றும் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரைக் கைதுசெய்ய ஆமதாபாத் மஜிஸ்ரேட் கைது வாரண்ட் பிறப்பித்த வழக்கில் தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொள்ளுமாறு சி.பி.ஐக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆமதாபாத் மஜிஸ்ரேட் பிரம்மபட் ரூபா 40,000 லஞ்சம் வாங்கிக்கொண்டு இவ்வாறு கைது வாரண்ட் பிறப்பித்தார் என்று பத்திரிகையாளர் விஜய்சங்கர் உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனுவொன்றைத் தாக்கல்செய்திருந்தார். நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோதே வழக்கின் புலன்விசாரணையைத் தொடர்ந்து நடத்தி பெப்ரவரி 23 ஆம் திகதி அறிக்கை தாக்கல் செய்யுமாறு சி.பி.ஐக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். (து)



ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் சாய்பாபாவின் ஆச்சிரமத்திற்கு சென்ற பிரதமர் வாஜ்பாய், அவரிடம் ஆசி பெற்றார். மக்களவைத் தேர்தல் நெருங்கிவரும் இந்நிலையில பிரதமர் ஆசி பெற்றுள்ளது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது.

# ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தேர்தல் பிரசார சட்டவிதிகளை மீறியுள்ளார்

## சிரேஷ்ட அதிகாரி குற்றச்சாட்டு

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடடின் தேர்தல் பிரசாரச சட்ட விதிகளை மீறும் வகையில் செயல்பட்டுள்ளதாக அந்த நாட்டின் சிரேஷ்ட தேர்தல் அதிகாரி குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் புட்டினின் நடவடிக்கைகள் ஜனநாயக நெறிமுறைகளை மீறும் வகையில் அமைந்துள்ளதா என்ற சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளதாக ரஷ்யாவின் மத்திய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அலெக்ஸாண்டர் வெஷ்னியாஹோம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாச் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ரஷ்ய ஜனாதிபதி சமஷ்டித் தொலைக் காட்சியில் ஆற்றிய உரைகள் தேர்தல் சட்டத்துக்கு விரோதமானவை என அவரை எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனா.

இதேவேளை, ரஷ்ய ஜனாதிபதியின இந்த 30 நிமிட உரைநேற்று முன்தினம் முழுவதும் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த விடயம் தொடர்பாக விசாரணைகள நடத்தப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படுமென தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(து-9)



வேலுப்பிள்ளை பிரபாகரனையும் அவரது தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஆதரித்துப் பேசினார் என்ற குற்றச்சாட்டில் சிறை வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் வெளிவந்த வைகோ தி.மு.கவின் முக்கியஸ்தராகவிருந்த காலத்தில் வேலுப்பிள்ளை பிரபாகரனோடு எடுத்துக்கொண்ட படம்.

## கடத்தப்பட்டிருந்த இவான் மீண்டும் பிரசாரத்தில் ஈடுபடுகிறார்

(மொஸ்கோ)

ரஷ்ய அதிபர் பதவிக்கான வேட்பாளர்களில் ஒருவரான இவான் ரிவ்ஹின் தான் ஐந்து நாட்கள் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், பெரும்பான்மையான நேரம் தான் மயக்க நிலையிலேயே இருந்ததாகவும் கூறியுள்ளார்.

தனக்கு சுயநினைவு திரும்பிய நேரத்தில் தான் தோன்றிய வீடியோப்படம் ஒன்றைத் தனக்குக் காட்டினார்கள் என்றும் அந்தப் படம் தனக்கு திகிலையூட்டியது என்றும் லண்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்தார்.

கடத்தியவர்களுடன் ஒத்துழைக்கவேண்டும் என்று தான் பின்னர் மிரட்டப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

கடத்தியவர்கள் யார் என்று அவரால் இப்போது கூறமுடியவில்லை. செச்சினியக் கிளர்ச்சித் தலைவர் அஸ்லாம் மச்ஹடோவைச் சந்திக்கவைப்பதாகப் பொய்க் காரணம் கூறி இஸ்ரேல் தலைநகர் ஜெருசலேமிற்கு தான் கடத்தப்பட்டதை விபரித்தார்.

ஒரு வீட்டில் தான் சாப்பிட்ட பதார்த்தம் தனக்கு மயக்கத்தைத தந்ததாகவும், நாட்கணக்கான மயக்கத்துக்குப் பிறகு தனக்குச் சுயநினைவு வந்ததாகவும் அவர் கூறினார்.

அதிபர் தேர்தலுக்கான தனது பிரசார நடவடிக்கைகள் தொடரும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(து-9)

## பிளவுபட்ட சைப்ரஸை ஒன்றிணைக்க நடவடிக்கை

(நிகோசியா)

கிரேக்க சைபரஸ்துருக்கி சைப்ரஸ ஆகியவற்றின் தலைவர்களுக்கிடையே இரண்டு நாடுகளையும் இணைப்பது தொடர்பாக நடைபெற்றுவரும் மிக முக்கிய பேச்சுவார்த்தையில் பாரிய திருப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

WORLD NEWS
உலக தரிசனம்

ஐரோப்பிய ஒன்றியத்தில் எதிர்வரும் மேமாதம் அங்கத்துவம் பெறவுள்ள சைபரஸ் அதற்கு முன்னர் இணைய வேண்டும் என்று கோரப்படுதற்கு அமைவாக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிளவுபட்டுள்ள சைப்ரஸை இணையதற்கு கடந்த 3 தசாப்தங்களாக நடைபெற்றுவந்த இராஜதந்திர மட்டத்திலான நடவடிக்கைகள் வெற்றியளிக்காத நிலையில் தற்போதைய பேச்சுவார்த்தைகள் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

1974 ஆம் ஆண்டு சைப்ரஸ்கீகுள் துருக்கியர்கள் ஊடுருவியதை அடுத்து அந்த நாடு இரண்டாகப் பிளவுபட்டு ஒரு பகுதி கிரேக்கத்துடனும், மறுபகுதி துருக்கியுடனும் இணைக்கப்பட்டன.

இந்நிலையில் பிளவுபட்டுள்ள சைப்ரஸை ஒன்றிணைக்க ஆக்கபர்வமான நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் இரண்டு பிரிவுகளின் தலைவர்களையும் நியூயோர்க்கில் நடைபெற்ற 3 நாள் பேச்சு வார்த்தையின் போது கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கமைய சைப்ரஸில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி பிளவுபட்டுள்ள இரண்டு பகுதிகளையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு இருதரப்பினரும் இணங்கியுள்ளனர். (து-9)

## புஷ்ஷின் குற்றச்சாட்டை மலேசியா நிராகரித்தது

(கோலாலம்பூர்)

அணுவாயுதத் தொழில்நுட்பத்தை வெளிநாடுகளில் பரப்புவதிலே மலேசியா ஒரு தளமாக இருந்ததாக அமெரிக்க அதிபர் புஷ் தெரிவிக்க முற்பட்ட குற்றச்சாட்டை மலேசியா நிராகரித்துள்ளது.

மலேசியப் பிரதமரான அப்துல்லா பர்ஹானி அமெரிக்க உளவுத் தகவல்களின் தராதரத்தைப் பற்றிக் கேள்விகளை எழுப்பியிருக்கின்றார்.

மலேசிய அரசியல் சார்புப் பத்திரிகையான நியூ செக்ஹான்ஸ் அதிபர் புஷ்ஷை போலித்தனம் கொண்ட ஓர் அரசியல்வாதி என்று வர்ணித்திருக்கின்றது.

அணுவாயுத உற்பத்தி ரகசியங்களை லபியா மற்றும் வடகொரியா போன்ற நாடுகளுக்கு விற்பனை செய்த பாகிஸ்தானிய விஞ்ஞானியான டாக்டர் அப்துல் காதிர்கானுடைய திட்டத்தோடு மலேசியாவுக்குத் தொடர்பிருந்ததாக அமெரிக்க அதிபர் இந்தவார முற்பகுதியில் தெரிவித்திருந்தார்.

மலேசியாவைத் தளமாகக் கொணட டி.எஸ்.ஏ.தாஹிர் என்னும் தொழிலதிபர் டாக்டர் கானினுடைய முயற்சிகளுக்குப் பணம் வழங்கியிருந்தார் என்றும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

தாஹிர் கைதுசெய்யப்படுகின்ற நிலைமை இப்பொழுது கிடையாது என்றும், மலேசியாவில் எங்கும் தான் விரும்பிய இடத்துக்கு போய் வருகின்ற சுதந்திரம் அவருக்கு இருக்கின்றது என்றும் மலேசியப் பிரதமர் அப்துல்லா கூறியிருக்கின்றார். (து-9)

## நவீனமுறையில் இதய சத்திரசிகிச்சை

(சென்னை)

இதயத்தில் இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புக்களை அறுவைச்சிகிச்சையின்றி நீக்கக் கூடிய புதிய சிகிச்சை முறை சென்னை அப்பலோ மருத்துவமனையில் நிகழ்த்தப்பட்டது.

இந்த நவீன சிகிச்சை முறையில் மருந்து தடவப்பட்ட லென்ஸ்கதிர் இதயத்தில் உள்ள இரத்தக்குழாய் அடைப்பின் மீது வீசப்படுவதன் மூலம் மண்டும் அடைப்பு ஏற்படாமல் தடுக்க வகைசெய்கிறது.

மும்பாய், டெல்லி, பெங்களூர், சென்னை முதலிய நகரங்களில் உள்ள தலைசிறந்த மருத்துவமனைகளைச் சேர்ந்த இதய நோய் சிகிச்சை நிபுணர்கள் இந்த நவீன அறுவைச் சிகிச்சையை நடத்தினார்கள்.

இந்த நவீன சிகிச்சை முறை சுமார் 5 ஆயிரம் இதய அறுவைச் சிகிச்.சை நிபுணர்கள் கலந்து கொண்ட மகாநாட்டில் சென்னையில் இருந்து நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

(து)



புதுடில்லி வந்திருந்த இஸ்ரேல் நாட்டின் துணைப் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சர் சில்வான் ஷெலோம், பிரதமர் வாஜ்பாயை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசிய போது...



சுமார் 650 தலிபான்-அல்கெய்டா சந்தேகநபர்கள் குவாண்டனாமோ வளைகுடா அருகில் காணப்படுகின்றனர். அவர்களில் ஒருவரைக் கைதுசெய்து கொண்டு செல்லும் அமெரிக்கவீரர்.

## ஈராக்கில் பொதுத் தேர்தல் விரைவில் நடைபெறும் சாத்தியம் பற்றிய முடிவு ஏதும் இல்லை

(நியூயோர்க்)

ஈராக்கில் விரைவாகத் தேர்தல் நடதத முடியுமா என்பது பற்றி ஆராய்வதற்காக அங்கே அனுப்பப்பட்டிருந்த ஐககிய நாடுகள் சபையின பிரதி நிதியான லக்ரர் பிரஹிரி அதற கான வாய்ப்புக்கள் உண்டா என்பது குறித் து எதையுமே சொல்லாமல் தனது பயணத்தை முடித்துக் கொண்டார்.

பக்தாத்தில் செய்தியாளர் மாநாட்டில் பேசிய லக்ரர் பிரஹிரி ஈராக்கில் தேர்தலுக்கான கூட்மைப்புப் பறறிப் பேசுவதற்கு முன்னதாக எத்தனையோ முக்கிய கேள்விகளுக்கு முதலில் பதில் தெரிந்தாக வேண்டும் என்றார்.

எந்த மாதிரியான தேர்தல் கட்டமைப்பை ஈராக்கியர்கள் விரும்புகிறார்கள் என்பது தெரிந்து கொளளப்பட்ட வேண்டும்; வாக்காளர்கள் பதிவு எவ்வாறு நடத்தப்படும் என்பன போனற பல கேள்விகள் இருக்கின்றன என்று அவர் கூறியிருக்கின்றார்.

அத்துடன் பாதுகாப்பு நிலவரம் குறித்தும் அவர் பேசியிருக்கின்றார். மக்கள் கண்மூடித்தனமாக சுயநலத்தோடு இயங்கிய சமயத்தில் தான் உள்நாட்டுப் போர்கள் வெடித்திருக்கின்றன என்றும் குறிபபிட்டார்.

தேர்தல்கள் விரைவாக நடத்தப்பட வேண்டும் என்று ஈராக்கில் குரல் கொடுத்திருந்த ஷியா முஸ்லிம் தலைவரான அயதுல்லா ஷித்ஹானியை இந்தப் பயணத்தின் பொழுது சந்தித்திருந்த இபராஹிம், அடுத்தவாரம் ஐ.நா.சபைப் பொதுச் செயலா ளரைக்கண்டு ஈராக்கிலே ஆய்வில் கிடைத்த முடிவுகளை வழங்கவிருக்கிறார். (து-9)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 46 தேசவழமை அத்தியாயம் 5

## ஒற்றியும் ஈடும்

### காணியை ஒற்றி வைத்தல்

1. யாதொருவர் ஒருவரிடமாக ஒரு காணியையென்கிலுந் தோட்டத்தையென்கிலும் ஒற்றியாக வைத்து அதன் புரோசனத்தை வட்டிக்குச் சரியாக அனுபவிக்கும்படி பொருந்தி சில பணங்களை வாங்கியிருந்ததேயுண்டானால் ஒற்றி வைத்தவன் தன்னிட்டபடி எக்காலத்திலும் அந்த ஒற்றியை மீளக்கூடாது. அப்படியே மீளவேண்டுமென்று கண்டால் அந்தக் காணியின் விளைவு மிதித்தடங்கிய உடன் காலத்திலே அந்தக் காணியிலே தெண்டித்துச் செலவு பண்ணிச் செய்கைப்படுத்தவேண்டாமென்று ஒற்றியாளுகிறவனுக்கு அறியப்பண்ணி வைக்கவேணும். ஒற்றிவைத்தவன் அந்தக்காணியின் பேரால் வாங்கியிருந்த பணம் வரகுபுலத்துக்கென்கில் ஆடி ஆவணி மாதங்களிலும், நெல் வயலுக்கென்கில் ஆவணி புரட்டாதி மாதங்களிலும் தவறாமல் ஒற்றியாளுகின்றவனிடமாகக் கொடுத்துவிடவேண்டியது. ஆனால் ஒற்றியாளுகிறவன் அடுத்த வருஷம் நல்ல வேளாண்மை விளையும்படியாக ஒரு வருஷம் அந்தத் காணியை விதையாமல் விட்டிருக்கின்ற சமயங்களிலே, ஒற்றி மீளுகிறவன் அந்த வருஷத்திற் கார்த்திகை மாதத்திலே ஒற்றிப்பணமிறுத்துக் காணியை மீண்டு கொள்ளவேண்டியது. அன்றியும் பனந்தோட்டம், கொழுந்துத்தோட்டம், புகையிலைத்தோட்டங்களையும் கார்த்திகை மாதத்திலே தான் மீளவேண்டியது. ஆனால் ஒற்றி கொண்டவன் தான் கொடுத்திருந்த ஒற்றிப் பணத்தின் வட்டிக்குத் தான் ஒற்றி பிடித்த காணி அல்லது தோட்டத்தின் புரோசனங் காணாததினிமித்தம், அந்தக்காணியை ஒற்றியாய் ஆட்சி பண்ண மனமில்லாமல் தான் கொடுத்த ஒற்றிப்பணம் மறுபடியும் வாங்கிக்கொள்ளப் பிரியப்பட்டால், அப்போது தான் ஒற்றி பிடித்திருந்த காணியையென்கிலும் தோட்டத்தையென்கிலும் அந்த ஒற்றி வைத்தவனிடமாக ஒப்புக்கொடுத்த பின்பு தன்னுடைய பணத்திற்கு ஒரு வருஷம் பொறுத்திருக்கவேணும். ஒற்றி விற்றவன் ஒரு வருஷத்தவணையில் ஒற்றி முதல் கொடுத்து அந்தக்காணியை உரிமைக்காரர் விலைக்குக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளவேணும். காணி ஒற்றிப்பணத்தைப் பார்க்க அதிகவிலை பெறுமென்றால் உரிமைக்காரர் கொள்ளுவார்கள். அல்லாதிருந்தால் ஒற்றி வாங்கினவன் தானே தன் பணத்திற்காகக் காணியை ஏற்றுக்கொண்டு ஒரு முறைமையான அறுதியுறுதி முடிப்பித்து அதைத் தன்னுடைய ஆட்சியாக்கிக்கொள்ளவேண்டும்.

### ஒற்றி கொண்டவன் காணிக்குண்டான சகல இறைகடமைகளையும் இறுக்க வேண்டும் என்பது

2. காணி ஒற்றிபிடித்தவன் அந்தக்காணியைத் தான் ஆண்டு வருமளவும் அந்த ஒற்றியை மீளுமவ்வாண்டுக்கும் உண்டான கடமையிறுத்து உத்தியோகத்தராலே (ை) கச்சாத்துப் பெற்றுக்கொள்ளவேண்டியது. ஆனால் இந்தக்காரியம் வடமராட்சிப் பற்றிலே மறு விதமாக நடந்துவருகிறது. அதாவது, அவ்விடத்திலே காணி ஒற்றி வைத்தவன் காணியிற் புரோசனத்திற் பத்திலொரு பங்கைத் தான் வாங்கிக்கொண்டு திறையையுந் தானே இறுத்துத் தன் பேருக்குப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளுவான். பனை மரங்களை ஒற்றி வைத்திருந்தால் அந்த ஒற்றியாளுகிறவனிடமாக உடையவன் திறைவாங்கி மையோர்மாரிடமாகக் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்வான்.

### ஒற்றி விற்றவன் ஒற்றி மீள்வதைக் குறித்து முன்னேற முறைமையாய் அறிவியாத போது ஒற்றி மீளுதல் எப்படியென்பது

3. காணி ஒற்றி விற்றவன் தனது காணியை மீளுகிறதற்குப் பிரியப்பட்டும் தன்னுடைய அறியாத்தனத்தினாலேயென்கிலும், மறுவிதமாகவென்கிலும் தன்னுடைய எண்ணத்தை அறிவிக்கவேண்டிய காலத்திலே அறிவியாமல் ஒற்றிக்காரன் காணியைச் செய்கைப்படுத்தி எருக்கட்டின பிறகு அறியப்பண்ணினால் அவன் காணியை மீளலாம். அப்படி மீண்டால் அந்த வருஷம் அந்தக்காணியிலே கண்ட விளைவில் ஒற்றிக்காரனுடைய செய்கைக்குந் தெண்டிப்புக்குஞ் சரியான ஒரு பங்கைக் காணியுடையவன் கொடுக்க வேண்டியது.

ஆனால் ஒற்றிக்காரன் தான் கொடுத்திருந்த ஒற்றி முதல் பற்றிக்கொண்டதன் பின்பு தேசவழமைப்படி அவ்வருஷத்திலே கண்டவிளைவில் தனக்குக்கிடைக்கவேண்டிய பங்கு இவ்வளவென்பதைக் குறித்துக் காணிக்காரனோடோ இணக்கமாய்த் தீர்த்துக்கொள்ளக் கூடாதிருந்தால், காணிக்காரன், ஒற்றிக்காரன் தானே அந்தக்காணியை விதைக்க விடவேண்டும். அவன் காணிக்காரனுக்குத் தேசவழமைப்படி தாரை வாரங்கொடுக்கவேண்டியது.

### தவணை குறித்து ஒற்றிவைத்தல்

4. இவ்விடத்திலே அநேகம்பேர் மூன்று அல்லது ஐந்து அல்லது எட்டு அல்லது பத்து வருஷத் தவணைக்குத் தங்கள் காணியை ஒற்றியாக வைப்பது இக்காலத்திலே வழக்கமாயிருக்கின்றது. அப்படிச் செய்தவிடத்தில் குறித்த தவணை செல்லமுன் ஒற்றி வைத்தவன் தனக்குண்டான கடனிறுக்கிறதற்காகவென்கிலும் வேறு விதங்களாகவென்கிலும் ஒற்றிக்காணியை விற்கவேண்டியதாயிருந்தால் ஒற்றி கொண்டவன் அதைவில்லாமற் தவிர்க்கவொண்ணாது அதற்குச் சம்மதித்துத் தேசவழமையின்படி தான் கொடுத்த பணத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டியது.

### காய்க்கிற மரங்களை ஒற்றிவைத்தல்

5. ஒருவுன் மேற்சொல்லியிருக்கிறபடி தென்னைமரம், வேம்பு, பலா, கமுகு இவ்விதமான மரங்களை வேறொருவனுக்கு ஒற்றியாக வைத்திருந்து மீளுகிறதற்குத் தகுதியுண்டாயிருந்தால் மார்கழி தை மாதங்களில் மீண்டுகொள்ளவேண்டியது. ஒற்றிகொண்டவன் உடையவனுக்கு மரங்களை ஒப்புக்கொடுக்குமுன் அந்த மரத்தில் உணவுக்கேற்ற பழங்களைப் பிடுங்கிக்கொள்ளலாம்.

### சிறைகளை ஒற்றிவைத்தல்

6. மேற்சொல்லப்பட்ட பிரகாரம் ஒரு ஆண் சிறையையாகிலும் பெண்சிறையையாகிலும் ஒற்றி வைத்துச் சில காலத்தின் பின் அந்தச் சிறை நையற்பட்டதுண்டானால், ஒற்றி வைத்த எஜமான் அந்த நோய்க்குப் பரிகாரஞ் செய்வித்துச் சுகமாக்கும்படிக்கு அவனுக்கு ஒற்றிவாங்கினவன் அறிவிக்கவேண்டியது. ஆனால் உடையவனுக்கு அறியப்பண்ணாமற் ஒற்றிவாங்கினவன் தன்னுடைய செலவாகப் பரிகாரம் பண்ணிவித்தானாகில் அதற்காகத் தான் செலவிட்ட சகல செலவுகளையுத் தானே பொறுத்துக்கொள்ள வேண்டியதன்றி உடையவனிடத்தில் கேட்கக்கூடாது. அந்தச் சிறை மரணித்துவிட்டால் உடையவன் தான் வாங்கியிருந்த ஒற்றிமுதல் ஒற்றிக்காரனுக்குக் கொடுத்துப்போட வேணும்.

(தொடரும்)

## அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்குப் பொருத்தமான அதிபர் தரங்களைச சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஏற்கனவே இப்பாடசாலைகளில் அதிபருக்குரிய கடமையை கவனிக்கும் ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம், கல்வியங்காடு இ.த.க.பாடசாலை, கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை, நீர்வேலி வடக்கு றோ.க.வித்தியாலயம், அச்செழு மெ.மி.த.க. பாடசாலை, நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலை, வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம், அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் வித்தியாலயம், புத்தூர் மெ.மித.க. பாடசாலை, சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை.

அத்துடன், கீழே விபரம் குறிப்பிடப்படுகின்ற பாடசாலைகளில் அவறறுக்கெதிராகக் குறிப்பிடப்படும் திகதிகளில் அதிபர்கள் ஓய்வு பெறுவதால் இடமாற்றத்தினால் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கும் பொருத்தமான அதிபர் தரங்களைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலயம் 2004.03.01, சன்மார்க்க மகாவித்தியாலயம் 2004.03.18, புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் 2004.05.13, புத்தூர் ஸ்ரீ பஞ்சசீக வித்தியாலயம் 2004.06.13, அச்சுவேலி மத்திய கல்லூரி 2004.06.30, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் 2004.08.30.

மேலே குறிப்பிடப்பட்ட 6 பாடசாலை அதிபர் பதவிகளுக்கான விண்ணபபங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 2004.02.28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுளளது. (தி)

## சுகாதார ஊழியர் சம்பள முரண்பாட்டில் மீண்டும் சிக்கல்

(கொழும்பு)

சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக கடந்த 2ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தில் மீண்டும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

சுற்றுநிருபத்திற்குப் புறம்பான வகையில் சுகாதாரத் துறையின் ஒரு பகுதியினருக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமாயின், அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக சுகாதாரத் துறையின் தொழிற் சங்கக் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சமன்ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கும் முகமாக தாம் கோரிய 75 சதவீத சம்பள உயர்வுக்குப் பதிலாக 60 சதவீதமே வழங்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.

(தி-62)

## பறவைக் காய்ச்சலை கட்டுப்படுத்த இந்தியாவில் விசேட கூட்டம்

(கொழும்பு)

ஆசிய நாடுகளை அச்சுறுத்தி வரும் பறவைக்காய்ச்சல் நோய் தொடர்பாக ஆராயும் தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்கு இடையேயான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபத்தின் வேண்டுகோளை அடுத்து இக் கூட்டத்திற்கான சகல ஏற்பாடுகளையும் இந்தியா மேற்கொண்டுள்ளது.

இந்நோயை தெற்காசிய நாடுகளில் மேலும் பரவவிடாது தடுப்பது குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இந்திய சுகாதார அமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், இலங்கை, மாலைதீவு, நேபாளம், பூட்டான், பாகிஸ்தான்,பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் சுகாதார மற்றும் விவசாய அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-62)

## குற்றச்செயலை கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா கடிதம்

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரும் அரசாங்க நிறுவனங்களில் அரசியலமைப்பு விரோத நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

குறிப்பாக சமுர்த்தி அதிகார சபை, இலங்கை தேயிலைச் சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி கனிப்பொருள் மணல் கம்பனி, புனர்வாழ்வு அமைச்சு ஆகியவற்றில் இத்தகைய மோசடிகளும் குற்றச் செயல்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நிறுவனங்களின் மோசடிகள், ஊழியர் நியமனங்கள், பதவி உயர்வுகள், அரசாங்க நிதிக்கொடுப்பனவு தொடர்பாக பல ஆவணங்கள் அவ்வவ் திணைக்களங்களிலும், நிறுவனங்களிலும் காணாமல் போயுள்ளன.

இத்தகைய மோசடிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (தி-61)

## நிர்வாக சபைக் கூட்டம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வரணி சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச் சபைக்கான புதிய நிர்வாக சபைக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பி.ப.2.30மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் தலைமையில் வரணி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (தி-36)

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று'
-குறள்

வலம்புரி

## யாழ்ப்பாணத்தில் தொடரும் அச்சம் தரும் கடத்தல்

யாழ்ப்பாண நாகரிகம் மிகஉயர்வானது. அது கந்தபுராண கலாசாரத்தின் அடிப்படையில் இருந்து தோற்றம் பெற்றது. இவ்வாறு பெருமைப்பட்ட யாழ்ப்பாண மக்கள் இன்று தலையில் துண்டை விரித்து முகத்தை மூடிச்செல்ல வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இளம் பெண்கள் மற்றும் மாணவிகள் வீதிகளில் தனித்து நடமாட முடியாத அளவில் நிலைமை படுமோசமாகிவிட்டது. இளைஞர்கள் குழுக்களாகச் சேர்ந்து நடத்துகின்ற அட்டகாசத்தை தாங்க முடியாது பொது மக்கள் அச்சங்கொண்டுள்ளனர்.

குறிப்பாக வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் தங்களுக்குள் ஓர் கூட்டை அமைத்துக்கொண்டு, இளம்பெண்கள் மீதும், பாடசாலை மாணவிகள் மீதும் சேட்டை விடுவதை வழமையாக்கிக்கொண்டுள்ளனர். இதன் உச்சக் கட்டமாக நான்கு ஐந்து இளைஞர்கள் சேர்ந்து இளம்பெண்களை - மாணவிகளை கடத்திச் சென்று பலாத்காரம் புரியும் சம்பவங்கள் நடந்தேறுகின்றன.

இவ்வாறு நடைபெற்ற பலாத்காரங்களில் ஒரு சில சம்பவங்களே வெளியில் அம்பலமாக பல சம்பவங்கள் கௌரவத்தின் பேரால் மறைக்கப்பட்டுவிடுகின்றது. இதனால் இளைஞர்குழுக்களின் மேற்போந்த நடவடிக்கைகள் நீண்டு செல்ல வாய்ப்பாகின்றது.

இறுக்கமான யாழ்ப்பாணக் கலாசாரத்தில் அதிரடியாக அறிமுகமாகியிருக்கும் இக்கடத்தல் விவகாரம் யாழ்ப்பாண மக்களால் சீர்தூக்கி ஆராயப்படவேண்டும். இல்லையேல் அதன் விளைவுகள் மிக மோசமாகுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

குறிப்பாக பெண்களைக் கடத்தும் விடயத்தில் பொலிஸாரினதும் சட்டத்துறையினதும் நடவடிக்கைகள் உறுதியாக இருக்க வேண்டும்.

இளைஞர்களின் அட்டகாச நடவடிக்கைகளில் பாராமுகமாக அல்லது அத்தகைய சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துக்கொள்ள பொலிஸாரும், சட்டத்தரணிகளும் உதவி செய்வார்களேயானால், நிலைமை மிக மோசமாகிப் போவதுடன், அதன் விளைவாக கோஷ்டி மோதல்கள் - ஊர்ச்சண்டைகள் என குழப்ப நிலைகள் ஏற்படுவதும் சாதாரண நிகழ்வாகிவிடும்.

யுத்தத்தின் கோரப்பிடியில் இருந்து மெல்லத் தலையை நீட்டும் வேளையில் - சில இளைஞர்களின் பொறுப்பற்ற - ஒழுக்கக் கேடான நடத்தைகள் மீளவும் துன்பத்துக்குள் தலையை அமிழ்த்துவதாகவுள்ளது.

இளைஞர்களின் இத்தகைய நடவடிக்கைகளின் பின்னணியில் தென்னிந்திய திரைப்படங்களின் பங்களிப்பும், யாழ்ப்பாணத்தில் வீதிக்கு வீதி சந்திக்குச் சந்தி காணப்படும் மதுபானச்சாலைகளும் கணிசமான இடத்தைப் பெற்றுள்ளன.

மதுப்பாவனை இப்போது மாணவர்கள் மத்தியிலும் தாராளமாகப் பரவியுள்ளது. மதுப்பாவனையால் இளைஞர்கள் தங்களின் சுய அறிவை இழந்துவிட, விரசவெறி அவர்களை ஆட்கொண்டுவிடுகிறது. இதன் காரணமாகவே இளம்பெண்களைக் கடத்தும் நிகழ்வுகள் அடிக்கடி இடம் பெறுகின்றன.

இத்தகைய சீரழிவான செயல்களுக்கு ஓட்டோக்கள் மற்றும் வாகனங்களின் உதவி தாராளமாகக்கிடைக்கின்றது. அதாவது , யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பெண் கடத்தும் சம்பவங்களில் பெரும்பாலானவை ஓட்டோக்களின் உதவியுடனேயே நடைபெற்றுள்ளது.

ஒருவரின் தகாத செயலுக்கு மற்றவரும் உதவி புரிகின்ற போதே ஓர் தீங்கான நிகழ்வு நடந்தேறுகின்றதெனும் தத்துவத்திற்கு அமைவாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பெண் கடத்தல் விடயத்தில் பெற்றோர், பொலிஸார், சட்டத்துறையினர், ஓட்டோ உரிமையாளர்கள் எனச் சகலரும் விழிப்பாக இருப்பார்களேயானால் கடத்தல் நாடகத்திற்கு உடனடியாக முடிவு கட்டுவதுடன் வீதிகளில் பெண்கள் துணிவோடு நடமாடவும் முடியும்.

# பாராளுமன்றம் கலைப்பின் எதிரொலி

இலங்கை நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிய இன்னும் 4 வருடங்கள் இருக்கின்ற நிலையில், கடந்த 7ஆம் திகதி நள்ளிரவில் பாராளுமன்றத்தை அதிரடியாகக் கலைத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து ஆட்சி அதிகாரத்தைத் தன்வசப்படுத்திக் கொண்டுவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.



அண்மையில் ரணில் அரசு வசம் இருந்த உள்துறை, பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்புத் துறையைத் திடீரென்று சந்திரிகா தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்ட போதே பாராளுமன்றம் எப்போதும் கலைக்கப்படலாம் என்ற பேச்சுக்கள் சர்வதேச அரங்கில் எதிரொலித்தன.

அதை தற்போது அதிரடியாக நிரூபித்திருக்கிறார் சந்திரிகா. ஏப்ரல் 2இல் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி நிருபம் சென்னுடன் நீண்டநேரம் ஆலோசனை நடத்தியிருக்கிறார் சந்திரிகா.

இச்சந்திப்பைத் தொடர்ந்தே அவர், அதிரடியாக நடவடிக்கை எடுத்துள்ளார். அதனால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதில் இந்தியாவின் தலையீடு இருப்பதாகவே நாங்கள் சந்தேகிக்கின்றோம் என்கின்றது பிரதமர் அலுவலக வட்டாரம். இதே சந்தேகத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளும் எழுப்புகின்றனர்.

ஆனால், இந்தியத் தூதர் நிருபம் சென்னோ நாடாளுமன்றம் கலைப்புத் தொடர்பாக நாங்கள் எந்தவொரு ஆலோசனையும் நடத்தவில்லை என்கிறார்.


இந்நிலையில், சந்திரிகாவின் இந்த அதிரடி நடவடிக்கைகளின் பின்னணியில் இருப்பது என்ன? என்பது பற்றிப் பல்வேறு ஊகங்கள் கொழும்பில் பரவிக்கிடக்கின்றன.

அமைதிப் பேச்சுவார்த்தையில் சர்வதேச நாடுகளிடம் ரணில் தரப்பு பெற்று வரும் பெருமையைத் தொடக்கத்திலிருந்தே சந்திரிகா விரும்பவில்லை.

தமிழர்கள் வாழும் வடக்குக் கிழக்குப் பகுதிகளை அங்கீகரித்து தமிழர்களின் அரசியல் அங்கீகாரம், சுயாட்சி உரிமைகள் என்ற அடிப்படையில் விட்டுக்கொடுக்க ரணில் அரசு செயல்படும் என்ற அச்சம் சந்திரிகாவுக்கு இருந்தது. இதைத் தடுப்பதற்காகத்தான் ரணில் அரசின் மூன்று அமைச்சர்களை நீக்கி அந்தத்துறைகளை எடுத்துக் கொண்டார் சந்திரிகா. அப்போதே பாராளுமன்றத்தைக் கலைத்துவிடலாம் என்றும் அவர் ஆலோசித்தார்.

ஆனால், அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஒரு தீவுக்குள் நடக்கும் பேச்சுவார்த்தைகள் என்கிற நிலைமாறி, அது சர்வதேசப் பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்துநின்றதால் அமைதிப்பேச்சுக்களைப் புலிகளுடன் ரணில் அரசுதரப்பு ஏற்படுத்திய ஒப்பந்தத்தை சந்திரிகாவால் ரத்துச்செய்ய முடியவில்லை.

இது சர்வதேச நாடுகளின் கண்டனங்களுக்கு ஆளாகும் என்று யோசித்ததால், பாராளுமன்றத்தைக் கலைக்கும் நோக்கம் எதுவும் இல்லை என்றார் சந்திரிகா. தற்போது, அதையெல்லாம் தூக்கி எறியும் படியாக சந்திரிகாவின் அதிரடிகள் இருக்கின்றன.



சந்திரிகாவின் கட்டுப்பாட்டிலுள்ள பாதுகாப்புத் துறைக்குரிய பாதுகாப்பு இல்லமான அத்துருகிரிய மிலேனியம் சிற்றி விவகாரம் தொடர்பில் இராணுவ ரீதியாக சில உயர் மட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காகவே இங்கு சில அதிகாரிகள் திறமையாகச் செயற்பட்டிருக்கிறார்கள்.

ஒரு படுகொலை தொடர்பாக கடந்த மாதத்தில் இராணுவத்தின் இப்பாதுகாப்பு இல்லம் மீது ரணில் அரசு அதிரடி சோதனைகளை நடாத்திப் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சில அதிகாரிகளைக் கைதுசெய்தது. இதனைக் கண்டு ஆத்திரம் அடைந்தார் சந்திரிகா.

ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இது தொடர்பாக விசாரணை ஆணைக்குழுவொன்றை அமைக்குமாறு கூறி அதற்கான குழுவொன்றையும் நியமித்தார். இக்குழுவின் அறிக்கை, ரணில் அரசின் கருத்துக்களை விட முரண்பாடுகளைக் கொண்டதாக இருந்ததே தவிர, உண்மையான விசாரணையை மேற்கொள்ளவில்லை. அதனால், இக்குழுவின் அறிக்கையை மீள்பரிசீலனை செய்வதற்காகப் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இதன் முதற்கட்ட விசாரணை தொடங்க விருந்தது. இந்த விசாரணை தொடங்குவதற்குமுன் சந்திரிகாவால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தலைவரும் இராணுவத் தளபதியும் பாராளுமன்றத்திற்கு வந்து ஆய்வுக் குழுவின் முன்பு ஆஜராகவேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால், பாராளுமன்றக் குழு கேட்கும் பல்வேறுபட்ட கேள்விகளுக்கு அவர்கள் உரியபதிலளிக்க வேண்டியிருக்கும் என்பதால், ஜனாதிபதி சந்திரிகா இதை விரும்பவில்லை.

பாராளுமன்ற ஆய்வுக்குழுவின் முன்பு ஆணைக்குழுவின் தலைவரும், இராணுவத் தளபதியும் ஆஜராகாமல் இருக்க என்ன செய்யலாம் என தனது அரசியல் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமருடன் சந்திரிகா பலமணிநேரம் ஆலோ சனை செய்தார். இதன்போது பாராளுமன்றத்தைக் கலைத்தால் மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தடுக்க முடியும் என்பது தவிர வேறு வழி எதுவும் பிறக்கவில்லை. அதனால், 'பாராளுமன்றைக் கலைக்கும் முடிவை எடுத்துவிட்டார் சந்திரிகா' என்கிற தகவலும் கொழும் பில் பரவியுள்ளது.

ரணில் தரப்பு இந்தப் பாராளுமன்றக் கலைப்பு முயற்சியைத் தடுப்பதற்கான வழி வகைகளையும் அவசரம் அவசரமாகப் பரிசீலித்துப் பார்த்தது. அதாவது, ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றநடவடிக்கைப் பத்திரம் ஒன்றைச் சபாநாயகரிடம் சமர்ப்பித்து மேல் நடவடிக்கைகளுக்காக அதைச் சபாநாயகர் ஏற்கும் பட்சத்தில், குறிப்பிட்ட விவகாரம் முடியும்வரை பாராளுமன்றத்தைக் கலைக்கக்கூடாது என பாராளுமன்றச் சட்டவிதிகள் கூறுகின்றது. இந்த விதிகளைப் பயன்படுத்தி ஒரு குற்றப் பத்திரம் கொடுக்கலாமா? என்று ரணில் தரப்பு பரிசீலித்தது.

ஆனால், அதற்குமுன்பே முந்திக்கொண்டு விட்டார் சந்திரிகா என்கின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

இது தவிர, விரைவில் நடக்கவிருந்த மாகாணசபைத் தேர்தலில் அவரது கட்சி மிக மோசமாகத் தோல்வியடையும் என்று சந்திரிகாவிடம் பலதரப்பட்ட உளவுத்துறை வழங்கிய அறிக்கையும் நாடாளுமன்றக் கலைப்புக்கு மற்றொரு காரணம் என்கிறது அரசியல் வட்டாரம்.

சந்திரிகாவின் இந்த அதிரடி, முஸ்லிம், சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

சமாதான முயற்சிகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது சந்திரிகாவின் பாராளுமன்றக் கலைப்பு. தமிழீழப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் அக்கறை சிங்களத் தலைவர்களுக்கு இல்லை.

தற்போதைய சூழலில் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்று அன்ரன் பாலசிங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். □

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

தாழ்ந்த ஓர் உண்மையிலிருந்து உயர்ந்த மற்றோர் உண்மைக்கு மனிதகுலம் செல்வதாக நீங்கள் கருதலாமேயன்றி, பிழையிலிருந்து உண்மைக்குச் செல்கிறோம் என்று நினைப்பது பொருந்தாது.

உணர்ச்சி வசப்படாதவர்களும் பற்றற்றவர்களும் இந்த உலகிற்கு மிகுந்த நன்மையைச் செய்திருக்கிறார்கள்.

நாளாந்த சிந்தனை

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 881038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

# ஈராக் பொலிஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல்

## 16 பொலிஸார் உட்பட 22 பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கின் பலுஜா நகரிலுள்ள பொலிஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் பட்டப்பகலில் ஊடுருவி மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 16 ஈராக்கியப் பொலிஸார் உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர். 35 பேர் காயமடைந்தனர்.

நேற்றுப் பகல் இத்துணிகரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பளலுஜா நகரிலுள்ள பொலிஸ் நிலையத்தையும் அதன் அருகிலுள்ள சிவில் பாதுகாப்புப்படை அலுவலகத்தையும் சுற்றி வளைத்த 70 ற்கும் அதிகமான தீவிரவாதிகள் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தையும் மோட்டார் குண்டுத் தாக்குதல்களையும் நடத்தினாள்.

பதிலுக்குப் பொலிஸாரும் திருப்பித் தாக்கினர்.

இத்தாக்குதல் சம்பவங்களில் 16 பொலிஸார் உட்பட 22 பேர் உயிரிழந்தனர். தீவிரவாதிகள் தரப்பில் மூவர் பலியாகினர். அங்கு சிறைவைக்கப்பட்டிருந்த கைதிகள் அனைவரையும் தீவிரவாதிகள் விடுவித்துள்ளனர். மேற்படி தாக்குதல் சம்பவத்தையடுத்து பலுஜா நகர்ப் பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. (த)

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி. யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392 சிவன் கோவில் வீதி,
Fax : 222 3214 காரைநகர்.
E.mail : smskr@eureka.lk T.P : 0602212472

# அமைச்சர் மிலிந்த பிரதமருக்கு எழுதிய கடிதம் செல்லாதாம்

## ஜனாதிபதி பதில் கடிதம்

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தனது அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்வது தொடர்பாகத் தமக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமருக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட தான் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாகப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்குக் கடிதம் எழுதியிருந்தார் அக்கடிதத்தைப் பிரதமர் ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சர் ஒருவர் பதவி விலகுவதாயின் அது தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். ஆனால் அமைச்சர் மிலிந்த மொறகொட அரசியலமைப்புக்கு மாறாகத் தமது இராஜினாமா தொடர்பாகப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

எனவே அமைச்சர் மொறகொட பதவி விலகுவதாயின் அது தொர்ட்பாக எழுத்து மூலம் தமக்கு அறிவிக்க வேண்டுமென ஜனாதிபதி, பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு கொட்டடி கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சு.நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், யாழ். கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.எஸ்.தங்கராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் வை.கவியன்பன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (யே-18)

## பொதுக் கல்விச் சபை போட்டிகள் இன்று

(யாழ்ப்பாணம்)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் அனுசரணையுடன் பொதுக்கல்விச் சபை நடாத்தும் தமிழ், ஆங்கில மொழிப் பேச்சுப் போட்டிகளும், தமிழ் மொழிமூல கவிதைப் போட்டிகளும் இன்று காலை 9 மணி முதல் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.(ந)

## பரிசளிப்பு விழா

(கொழும்புத்துறை)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக திருமதி இராசா வாமதேவனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-51)

# 17வது ஆண்டு நினைவு தினம் கைதடியில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளான லெப்.கேணல் பொன்னம்மான், மேஜர் கேடில்ஸ், கப்டன் வாசு உட்பட பத்து வேங்கைகளின் 17 வது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள், கைதடி மத்தி உதய சூரியன் சனசமூக நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

நிலையத் தலைவர் அ.இராசலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. வேங்கைகள் வீரச்சாவடைந்த நேரமான மாலை 5.05 மணிக்கு, யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் பொதுச்சுடரினை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து பொன்னம்மானின் நினைவாக, தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் மாறன், கேடில்ஸ் நினைவாக, தேசிய எழுச்சிப்பேரவை ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், வாசன் நினைவாக கைதடிப் பிரதேசப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் நினைவுச் சுடரினை ஏற்றி வைத்தனர்.

நிகழ்வில் பெருந்திரளான பொது மக்கள் கலந்துகொண்டனர். (இ)

# தேர்தல் பணிகளைக் கண்காணிக்க பவ்ரல் அமைப்புக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் அற்ற தேர்தல் ஒன்றை நடாத்தும் விதமாக உள்ளூர் கண்காணிப்புக்குழுவொன்றுக்குத் தேர்தல் ஆணையாளர் உத்தியோக பூர்வ அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இந்தப் பொதுத் தேர்தலின் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக பவ்ரல் எனும் தனியார் நிறுவனத்திடம் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார்.

இலங்கை தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையின் மூலம், தேர்தலின் போது ஏற்படக்கூடிய முறைகேடுகளைத் தவிர்த்துக கொள்ளலாம் எனவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக பவ்ரல் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கிங்ஸ்லி ரொட்றிகோ கருத்துத் தெரிவிக்கையில்,

நேபாளம், நியூசிலாந்து, நெதர்லாந்து மற்றும் தாய்லாநது போன்ற சர்வதேச நாடுகளில் இருந்து இந்தக் கண்காணிப்புப் பணிகளுக்காக 20 அதிகாரிகள் வரவழைக்கபபட்டுள்ளதுடன், உளளூரில் இருந்து 20 ஆயிரம் பேரும் நியமிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1987 ஆம் ஆண்டு இந்தத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர், முதற தடவையாக இம் முறை இத்தகைய ஒரு அங்கீகாரம் தமது அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது வழமையைப் போலன்றி இம் முறை உள்ளூர் கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு உள்ளே இருந்தே தமது கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு வாக்குச் சாவடிக்கு இருவர் என்ற வீதத்தில் நாடு பூராவும் அமைக்கப்படவுள்ள 9ஆயிரத்து 500 வாக்குச் சாவடிகளில் இவர்கள் கடமையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

இந்த 20 ஆயிரம் பேரும் உள்ளூர் மட்டத்தில் விழிப்புக் குழுக்கள் மற்றும அமைப்புக்களுடன் இணைந்து செயற்படவுள்ளனர்.

அத்துடன், இக் குழுவினர் தவிர, சர்வதேசப் பிரதிநிதிகள் 6 பேரைக் கொண்ட, 60 பேரடங்கிய சிறப்பு நடமாடும் குழுவொன்றும் இத்தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளதுடன், எதிர் வரும் 21 ஆம் திகதி நடை பெறவுள்ள அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தலி லும் இவ்வமைப்பு கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-18)

# கூட்டணி தொடர்பான...

வந்து விட்டது. ஆகவே தயவு செய்து பின்வரும் விடயங்களுக்கமைய நடக்க உறுதிபூணும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எந்த அரசியல் கட்சியுடனும் அரசியல் கூட்டுச்சேரும் விடயமாக பேசித் தீர்க்கும் அதிகாரம் உங்களுக்குத் தரப்படவில்லை. இந்த விடயத்தில் எமது கட்சி எதுவித முடிபும் எடுக்கவில்லை. இருப்பினும் எமது கட்சி ஏதேனும் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவது சம்பந்தமாக பேசுவதானாலும் முன்கூட்டியே 11.02.2004 நீதிமன்ற தீர்ப்புக்கமைய என்னுடன் பேசி அனுமதி பெற்றே செயற்பட வேண்டும்.

ஏப்ரல் 2இல் நடைபெறவிருக்கும் பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்காக வேறு அரசியல் கட்சிகளுடன் கூட்டுச்சேர வேண்டும் என நாம் எந்த ஒரு கட்சிக் கூட்டத்திலும் தீர்மானிக்கவில்லை.

எனக்குத் தெரியாமல் தாங்கள் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வேறுகட்சிகளுடன் கூட்டுச் சேருவது சம்பந்தமாக ஆலோசனை நடத்தியிருக்கின்றீர்கள் என ஊடகங்கள் மூலமாக அறிந்து ஆச்சரியப்பட்டேன். வேறு கட்சிகளானால் கூட்டப்படும் கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், அத்தகைய அழைப்புக்கள் வரும் பட்சத்தில், அத்தகைய கூட்டங்களில் கலந்துகொள்வதானால் முன்கூட்டியே எனது அனுமதியை எழுத்து மூலமாகப் பெற்றுக் கொள்ளுமாறும், அதேபோல வேறு அரசியல் கட்சிகளுடன் இணைந்து கூட்டங்கள் கூட்டுவதற்கும் தங்களுக்கு அதிகாரம் இல்லாதமையினால் அதையும் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

எமது கட்சி ஓர் உயர்ந்த தனித்துவத்தைக் கொண்ட ஓர் கட்சியாகும். ஆண்டாண்டு காலமாக எம்மால் கட்டியெழுப்பப்பட்ட தனித்துவத்தை நாம் இழக்க முடியாது. எமது தலைவர்களும், கட்சி உறுப்பினர்களும் கடந்த காலத்தில் எத்தகைய தியாகங்களைச் செய்துள்ளனர் என்பதை நாம் உணர வேண்டும். எம் இனத்திற்காகவும், கட்சிக்காகவும் எமது தலைவர்களும், உறுப்பினர்களும் உயிர்த்தியாகம் கூடச் செய்துள்ளனர்.

15 ஆண்டுகளுக்குமேல் பாராளுமன்றத்திலும் 50 ஆண்டுகளுக்குமேல் அரசியலிலும் இருந்த முதிர்ந்த தமிழ் அரசியல்வாதி என்பதினால் நாம் தமிழ்ச் சமுதாயத்திற்கு விசுவாசமாகவும், உண்மையாகவும் உழைப்பதாக இருந்தால் களங்கமற்ற, சிறந்த வரலாற்றைக்கொண்ட ஒரேஒரு தமிழ் மிதவாதக்கட்சியாகிய தமிழர்விடுதலைக் கூட்டணி தனது சின்னத்தின்கீழ் வட-கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்டே ஆக வேண்டும் என்பதே எனது உறுதியான நம்பிக்கையாகும். எமது கட்சியின் சின்னத்தில் போட்டியிடும் அனைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினராக இருக்க வேண்டும் என்பதைத் தயவு செய்து உறுதிப்படுத்துவதோடு கட்சி உறுப்பினர் அல்லாதவர்களைப் போட்டியிட வைப்பது விரோதமாகையால் அத்தகைய செயலில் தயவு செய்து ஈடுபட வேண்டாம்.

நீங்கள் தனிப்பட்ட முறையில் எமது கட்சி உறுப்பினர் அல்லாத சிலரை கட்சியின் கொடியிலும், சின்னத்திலும் போட்டியிட வைக்க முயற்சிப்பதாக ஊடகங்கள் மூலம் அறிகின்றேன். இதைச் செய்கின்ற அதிகாரத்தை யார் வழங்கினார்கள். தயவு செய்து உங்கள் பதவிக்குரிய வட்டத்திற்குள் இருந்து செயற்படுமாறும், கட்சியில் அந்தஸ்துக்கும் நற்பெயருக்கும் பங்கம் ஏற்படாத வகையில் செயற்படுமாறும் பணிவாக வேண்டுகின்றேன்.

மேலே கூறப்பட்ட நான்கு விடயங்களில் ஏதேனும் ஒன்றையோ அதற்கு மேற்பட்டவைகளையோ மீறினால் நீதிமன்றத்தின் ஆணையை மீறிய குற்றத்திற்கு ஆளாகி அதற்குரிய பலாபலன்களையும் அனுபவிப்பீர்கள். இறுதியாக மீண்டும் ஒரு தடவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இல.டி.சி. 6933 எஸ்.பி.எல். வழக்கின் தீர்ப்பில் 11.02.2004 அன்று நீதிபதி இட்ட கட்டளையின்படி கட்சி சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கை அனைத்திற்கும் என்னுடன் கலந்தாலோசித்து அனுமதியைப் பெற வேண்டும் என்பதை ஞாபகமூட்ட விரும்புகின்றேன். இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யுத்தநிறுத்த...

அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது:

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரத் தன்மையற்ற அரசியல் நிலை உருவாகியுள்ள போதும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள இடம்பெயர்ந்த 3 லட்சத்து 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியதன் அவசியத்தை நாம் உணர்ந்துள்ளோம்.

இதன் அடிப்படையில் நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் நடைபெறுவதை அரச அதிகாரிகளோ இடம் பெயர்ந்த மக்களோ, விடுதலைப் புலிகளோ விரும்பவில்லை என்பதையும் எமது மூன்று நாள் விஜயத்தின் போது தெளிவாக அறிந்து கொண்டேன்.

இடம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பிரச்சினைகள் மிகவும் பாரதூரமான நிலைமையில் உள்ளது. இவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் அவர்களது பிரச்சினைகளுக்கு சுமூகமான நிலையான அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் எனவும் அவர் அங்கு வலியுறுத்திக் கூறினார். (ம)

## கொழும்புத்...

இப் போராட்டம் இடம்பெற்றது.

இதனையடுத்து இப் பகுதி மக்கள் 512வது படைத்தலைமையகத்திற்குச் சென்று அங்கு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி வீதியை மிக விரைவில் மக்கள் பாவனைக்காக திறந்து விடுவதாக படையினர் உறுதியளித்ததாவும் தெரிய வருகிறது. (இ-51)

## காதலர்...

பிடித்துக் காணப்பட்டது.

கேட்பார் எவருமற்ற இளைஞர்களின் இவ் எல்லை மீறிய போக்கு, பொதுமக்களை விசனமடையச் செய்துள்ளது.

யுத்தவடு மாறாத குடாநாட்டில் காதலர் தினம் ஒரு கேடா எனப் பெரியவர் ஒருவர் தெரிவித்த கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

காதல் என்பது புனிதமானது- அது இமைப்பொழுதிலும் மறவாமல் நினைப்பது- அதற்கு ஒரு தினமா? என்றதொரு ஆதங்கம் அவரிடம் காணப்பட்டதையும் உணர முடிந்தது. (இ)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.